இலவச வெளியீடு: யேர்மனி - இங்கிலாந்து-கனடா தை. Jan.2012

Free Circulation

# வெற்றிமணி

**Vettimaniy**

மணி 62 பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் B.F.A. ஓசை 186

## கனடாவில் தைப்பொங்கல் பண்டிகையை தமிழர் பாரம்பரிய விழாவாக அங்கீகரிப்பு!

### மார்க்கம் நகரசபை முன்னோடியாகத் திகழ்கின்றது!



## சனிப் பெயர்ச்சி

21.12.2011 - முதல் -16.12.2014 - வரை

## கணிதத்தில் யாழ் மாணவன் முதலிடம்!

## victory bell

Page... 18

அனைவருக்கும் எங்கள் இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்


**Orientalische Textilien & Schmuck**
Germany



22 ஆண்டுகளாக நம்பிக்கை!
நாணயத்தின்!! இருப்பிடம்.

தரமான தங்க நகைகளுக்கு
உத்தரவாதமிக்க நகைமாளிகை

Königswall 16 (Am HBF) 44137 Dortmund
Tel: 0231/162377 Fax: 49.0231/147836

**Orient Textiles & Jewellery U.K**
வட தென் இந்திய சேலைகள் நங்கையர் விரும்பும்
Fancy Jewellery
165 Upper Tooting Road
SW17 7TJ-London Tel:0208 68 23 958

எங்கள் நிறுவனத்தின் 17 வது ஆண்டு நிறைவில்
உங்கள் ஆதரவுக்கு நன்றி சொல்லி மகிழ்கின்றோம்!




**Travel AIR**
www.travelair.de
Tel: 0202/4936921 ,
Fax: 0202/2443106
Tel: 0202/24431 04 - 05
Luisen Str.46 , 42103 Wuppertal

**Gopara Gnanam**



பலசரக்குப் பொருட்களும் பசுமையான மரக்கறியும்
கடல் உணவுவகைகளும்
கற்பனைக் கெட்டாத
தெரிவுகளில் சேலைகளும்
எம்மிடம் தரமாக
நிறைவாக
உண்டு.

எம்மிடம் என்றும்
மலிவு
என்பதே
பேச்சு!

Rheinische Str.81
44137 Dortmund
Germany
Tel: 0231/5450028
Mob: 01713306542

**முத்து கடல் மீன்கள்**
Fisch&Foods
Germany



Tel: +49 911 97790466
Fax:+49 911 457183
சுவையோ சுவை!!!
Fisch &Food
Karl-Brüger.Str21
90459 Nuernberg.
மொத்தமாகவும்
சில்லறையாகவும்
பெற நாடுங்கள்.

ஆடை ஆபரணம்
ஆன்றாட மளிகைப்
பொருட்களின் மாளிகை...
Tel:0231 819288

**T.T.S.Brothers Asien Supermarkt**



உங்கள் உறவுகளுக்கு துரிதமாகப் பணம் அனுப்ப நாடுங்கள்!
யாழ்ப்பாணத்தில் Bank of ceylon, HNB Bank, Comercial bank பணம் பெறலாம்.

RHEINISCHE STR 52
44137 DORTMUND
GARTEN STR-29-48147 MÜNSTER
TEl:0251-2301184 Fax: 0251-2301183
Helmholtz Str.11 -46045 Oberhausen
Tel:0208 202829
Germany

**கனீன் எலக்ரோனிக்ஸ்!**
வெகுவிரைவில்
சற்றலைட் இல்லாமல்
Internet மூலம் (IP TV) தீபம் மற்றும்
தொலைக்காட்சிகளைப் பார்த்து மகிழலாம்.
சந்தா அட்டைகள் புதுப்பிக்கவும்
புதியவை பெறவும் எம்மை நாடுங்கள்
கலைவிழாக்களைக் கலைநயத்துடன்
ஒளிப்பதிவு செய்ய
நாடுங்கள்....www.kaneenelectronics.de
Schevenhofer Weg 24,- 42111 Wuppertal
Tel: 0205 3423 740 Germany

அனைத்துலகத் தமிழர்களுக்கு
ஓர் தமிழ்த் தொலைக்காட்சி
கலைஞர் ஐங்கரன்
திரைக்குவந்து சில நாட்களேயான புத்தம் புதிய
திரைப்படங்கள்!சின்னத்திரைத் தொடர்கள்!
மனதில் நிற்கும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள்
உங்கள் கலைஞர் ஐங்கரன் T.V யில் காணுங்கள்!
119 38 Eurobird 9°
hot terminal 27,500
தொலைபேசி இல. 0044 208 543 43 22
ayngaran.com

யேர்மனியில் தரம்மிக்க ஓர் மொத்த வியாபார நிலையம்!
Tel.: 0231/8602696 Kipper str.Tor.3- 44147 Dortmund
**StaR - Impex**

**London's Largest Selections**
Jewellers & Silk House
எப்பொழுதும் நியாயமான விலை
புத்தம் புது டிசைன்கள்



**Rathy ரதி**
28 Ealing Rd
Wembley
HA0 4TL London
Tel: 02089033063
209 upper tooting Road
tooting sw19 7gt
0208682 2233



**S.K.Silks & Gold Praadise**
டோட்முண்
நகரில் மாபெரும்
ராஜ முத்திரை!
அனைவருக்கும் எங்கள் இனிய
தைப்பொங்கல் வாழ்த்துக்கள்
Mr.P.Sritharan
Proprietor
பட்டுச்சேலைகள் பஞ்சாபிகள் மற்றும் புதிய புதிய சேலைகள் யாவும்
உங்களை நாகரிக உலகில் அழகு அரசிகளாக பவனிவரப் பணிபுரிபவர்கள்
நாங்கள். நாடுங்கள் நம்மை, நன்மை பல...
என்றும்
புதியது
அழகின்
இரகசியம்
அது.
sk_silks@hotmail.de
Adler str 33 - 44137 Dortmund Tel:0231 9501 647



மக்களின் மனங்கவர்ந்த ஸ்தாபனம்




Tel.: 0201/236925
Fax: 0201/236928

இலங்கை, இந்திய உப உணவுப் பொருட்கள், மற்றும் கடல் உணவு வகைகள் அனைத்தும் தரமாகவும் மலிவாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

மங்கல வைபவகங்களுக்கு ஏற்ற மணவறைகள் மற்றும் சிறந்த வீடியோ படப்பிடிப்புக்கும் நாடுங்கள்...

பழைய, புதிய திரைப்படங்கள் மற்றும் மனதுக்கினிய திரைப்படப்பாடல்கள் சிடி,அவுடியோ எம்மிடம் கிடைக்கும்

APIRAAMI ENTERPRISE
Pferdemarkt 9
45127 ESSEN







மாதங்கி

# வித்தியாசமான வீடுகள்

ஒரு வீடு கட்டி முடிக்க நாம் ஒற்றைக்காலில் நிற்போம். சிலர் தலைகீழாக நிற்பர். அவ்வவு சிரமம் ஒரு வீடு கட்டுதல். ஆனால் இங்கு வீடு ஒன்று ஒற்றைக்காலில் நிற்கின்றது.

தலைகீழாக நிற்கின்றது. எல்லாம் நாகரீகத்தின் உச்சம். எதையும் வித்தியாசமாகச் செய்ய வேண்டும் என்ற ஏக்கத்தின் பிரதிபலிப்புக்களே இங்கு காணும் வீடுகள்.
எந்த வீடுகளும் மனிதருக்காக அல்ல, அவையாவும் தம்மை மனிதர் திரும்பிப்பார்க்க வேண்டும் அந்த அளவிற்கு வித்தியாசமாக இருக்வேண்டும் என்று நிமிர்ந்து நிற்பவை.
சிவன் எப்படி ஒற்றைக் காலில் தாண்டவம் ஆடுகின்றார். விழ மாட்டாரா என்று மேற்குலகத்தின் கேள்விக்கு, தற்போது அவர்களே விடையைக் கண்டு பிடித்து அதனை தாமும் பாவிக்கத் தலைப்பட்டுவிட்டனர்.
ஒவ்வொரு நாட்டிலும் இப்படியான தலைகீழ் அமைப்பு வீடுகளும், அதுமட்டுமன்றி வீடு என்ற எமது எண்ணத்துக்கு அப்பால் அவர்கள் அமைத்த வீடுகளையும் இங்கே காணலாம்.

கனடாவில் நுனிவிரலில் நின்று நடனமாடும் பெண்போல், ஒரு வீடு

ஒற்றை விரல் ஊண்டி கம்பீரமாக இருப்பதைக்காணலாம்.
கனடா நயாகராவில் அமைந்த இன்னுமொரு வீடு,

இப்பவோ அப்பவோ! இடிந்து விழுவோமோ என்ற நொடிக்கணத்தில் காத்திருப்பதுபோன்ற வெடிப்புக்களுடன் ஒரு பலமான வீட்டை இங்கு காணலாம்.

அடுத்து ஒரு கூடைபோன்று ஒரு வீடு.

இப்படி பலகோணங்களில் வித்தியாசமாக வீடுகள் வீற்று இருப்பதைக் காணுங்கள்.......







Poland

மக்களின் மனங்கவர்ந்த ஸ்தாபனம்

T.R.S Traders



இலங்கை, இந்திய உபஉணவுப் பொருட்கள், மற்றும் கடல் உணவு வகைகள் அனைத்தும் தரமாகவும் மலிவாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

T.R.S Traders
Königswall-16 (Am Hbf)
44137 Dortmund
உரிமையாளர்: P. இராஜேந்திரவரதன்

Tel.: 0231/160 494
Fax: 0231/165 6524

Lakshmi Jewellery &Silks

Bielefeld City- - Jahn platz

தங்கள் மனங்கவர் டிசைன்களில் தங்க ஆபரணத் தெரிவுகளுக்கும்,வண்ண வண்ண நவநாகரீக ஆடைத் தெரிவுகளுக்கும் நினைவில் நிற்க வேண்டிய ஸ்தாபனம்
Lakshmi Jewellery &Silk
Herforder Str.08
33602 Bielefeld
தொலைபேசி: 0179 72 35 729
http://www.lakshmi-jewellerysilks.de



செவ்வாய்க்கிழமை முதல் சனிக்கிழமை வரை
காலை 11.00 மணிமுதல் மாலை 7.00 மணிவரை

Tel:0521 4283 510

பழைய பவுணுக்கு புதிய பவுண் மாற்றிக் கொடுக்கப்படும்!

பிருந்தா
Pirruntha Silk House
Textile & Jewellery



22 கரட் தங்க நகைகள் நீங்கள் விரும்பும் இரகங்களில் பெற்றுக் கொள்ளலாம். திருமண பட்டுப் புடவைகள் மற்றும் அனைத்துவகை ஆடவர் மங்கயர் உடைகளுக்கும், அன்பளிப்புப்பொருட்கள் அனைத்திற்கும் நாடுங்கள்.

Handy :01703344059

Tel : 0711/ 61 58 976
Fax: 0711-61 42 663

Ludwig str. 92
70197 Stuttgart

தரமும் மலிவும் ஓர் இடத்தில்.

Pirruntha Imex




உங்கள் இல்லங்களுக்கு தேவையான அனைத்து மளிகைப்பொருட்கள் மற்றும் மரக்கறிவகைகளும் (ஆபிரிக்கத,தாய்லாந்து இலங்கை) மீன் வகைகள் அனைத்துக்கும் நாடுங்கள்!

Wilhelm Str.33
71034 Böbilimgan

Tel:07031 67 82 90
Fax:07031 681350

**வெற்றிமணி**

**தமிழ் எங்கள் உயிருக்கு மேல்**
————————கவிஞர்.வி.க



**ஆரம்பம்:**1950

ஸ்தாபகர்
அமரர் **மு.க.சுப்பிரமணியம்**
(முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன்.பரமானந்தர்
வித்தியாசாலை)

**பிரதம ஆசிரியர்**
“ஓவியக்கலைவேள்”
**கலாநிதி**
**மு.க.சு.சிவகுமாரன்** B.F.A.

*Chief Editor:*
**Dr.M.K.S.Sivakumaran B.F.A.**

**Postfach 2765**
**58477 Lüdenscheid**
**Germany**
**Tel&Fax:**
**02351/45 88 62**
**0157 88 77 31 56**

e-mail: vettimaniy@hotmail.com

QB 830

**“வெற்றிமணிமொழி”**

தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது
**அரவிந்தர்**

பத்திரிகை வடிவம்
**சிவகுமாரன் சஞ்ஜீவன்.**B .Eng (Hons)

# கனடாவில் தைப்பொங்கல் பண்டிகையை தமிழர் பாரம்பரிய விழாவாக அங்கீகரிப்பு!

## மார்க்கம் நகரசபை அதற்கு முன்னோடியாகத் திகழ்கின்றது!



கனடா, மார்க்கம் நகரசபை தைப்பொங்கல் பண்டிகையை தமிழர் பாராம்பரிய விழாவாக அதிகாரபூர்வமாக அங்கீகரிப்பு.

கனடாவில் உள்ள மிகப்பெரிய மார்க்கம் மாநகர சபை ஒவ்வொரு வருடத்திலும் வரும் தை 13ம், 14ம், 15ம் திகதிகளை தமிழர்களின் பாரம்பரிய நாட்களாகவும் தைப்பொங்கல் பண்டிகையை பாரம்பரிய விழாவாகவும் அங்கீகரித்துள்ளது.

இதன் மூலம் கனடாவில் ஒரு தமிழர் பண்டிகையையும் அதனோடு சார்ந்த நாட்களையும் அதிகாரபூர்வமாக அங்கீகரித்த மாநகர சபை என்ற பெருமையை மேற்படி மார்க்கம் நகர சபை பெற்றுள்ளது.

இவ்வாறு தைப்பொங்கல் திருநாள் மற்றும் அதனோடு சார்ந்த தை 13ம், 14ம், 15ம் திகதிகளை மேற்படி மாநகர சபை அதிகாரபூர்வமான அங்கீகரிப்பதற்கு காரணமாக இருந்தவர்கள் பலர்.

அவர்களுள் முதன்மையானவர் மார்க்கம் நகர சபையின் 7ம் வட்டார அங்கத்தவரும் மார்க்கம் நகர சபையின் மேயர் உட்பட அனைத்து அங்கத்தவர் களினதும் நன்மதிப்பைப் பெற்ற திரு லோகன் கணபதி என்றால் அது மிகையாகாது.

அத்துடன் மேற்படி நல்லதோர் திட்டத்தை அறிமுகம் செய்த மார்க்கம் நகரத்தின் தமிழர் அமைப்புக்களை நாம் மறந்து விடக்கூடாது. அவையாவன:- மார்க்கம் தமிழர் சங்கம், சீடர்வூட் தமிழ் பேசும் வரியிறுப் பாளர்கள் சங்கம், மற்றும் மார்க்கம் நகரத்தின் தமிழ் மூத்தோர் சங்கம் ஆகியவையாகும்.

மேற்படி அமைப்புக்கள் கடந்த 2 வருடங்களாக நகர சபை அங்கத்தவர் திரு லோகன் கணபதி ஊடாக மார்க்கம் மாநகர சபையின் மேயருக்கும் அதன் நிர்வாகத்திற்கும் கொடுத்துவந்த அழுத்தம் காரணமாகவே இந்த நல்லதோர் பலன் கிட்டியிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இதன் மூலம் கனடாவில் நமது தமிழ் மக்களுக்கு ஒரு உயர்ந்த அங்கீகாரமும் கிட்டியுள்ளது. மார்க்கம் மாநகர சபையில் கடந்த மாதம் நடைபெற்ற விசேட கூட்டத்தில் மார்க்கம் நகரசபை அங்கத்தவர் திரு லோகன் கணபதி மேற்படி தீர்மானத்தை முன்மொழிய கனடிய வெள்ளை இனத்தவரான மற்றுமொரு நகர சபை அங்கத்தவர் திரு கொலின் கெம்பல் (C) அதனை ஆமோதித்தார்.

அதனை மாநகரசபையில் மேயர் உட்பட அனைத்து அங்கத்தவர்களும் ஏற்றுக்கொண்டனர்.

எனவே ஏகமனதாக தமிழர் பாராம்பரிய நாட்கள் மாநகரசபையினால் அங்கீகரிக்கப்பட்டன. மேற்படி தீர்மானத்தை முன்மொழிந்து சபையில் உரையாற்றிய திரு லோகன் கணபதி தைப்பொங்கல் பண்டிகையின் பெருமையினை நன்கு விளங்கப்படுத்தினார்.

தை மாதத்தில் வரும் 13ம், 14ம் 15ம் திகதிகளில் நமது தாயகத்திலும் இந்தியாவிலும் தமிழ் மக்கள் பொங்கல் திருநாளை கொண்டாடுவார்கள். இது ஏன் என்றால் தங்களுக்கு நெற்பயிரை நன்கு விளையச் செய்து நல்ல அரியை எங்களுக்கு தந்துள்ள சூரியனுக்கும் பசுக்கள் போன்ற மிருகங்களுக்கும் நன்றி செலுத்துவதற்காகவே தமிழ் மக்கள் மேற்படி பொங்கல் பண்டிகையை கொண்டாடுகின்றார்கள்.

அத்துடன் தை மாதத்தை நமது தமிழ் மக்கள் ஒரு புனிதமான மாதமாகவே கணிப்பதுண்டு.” என்றார்.

அத்துடன் அவர் மேலும் நன்றி தெரிவித்து உரையாற்றுகையில் “ மார்க்கம் மாநகர சபையின் மேயரும் ஏனைய அங்கத்தவர்களும் எப்போதுமே பல்லின மக்களின் நலன்களைப் பேணுவதிலும் அந்த மக்களை மதிப்பதிலும் முன்னிற்பவர்கள்.

எமது தைத்திருநாளை தமிழ் மக்களின் பாராம்பரிய பண்டிகையாக கனடாவின் மார்க்கம் நகரசபை அங்கீகரித் திருப்பது என்பது ஒரு சாதாரண விடயமல்ல. இன்றைய நாள் கனடாவின் தமிழர்களுக்கு ஒரு வரலாற்று முக்கியத்துவம் மிக்க நாளாகும். இந்த நல்ல ஒரு பணியை முன்னெடுப்பதில் எனக்கும் பங்களிக்க கிடைத்த சந்தர்ப்பத்திற்கு நான் மார்க்கம் நகரத்தில் வாழும் தமிழ் மக்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்” என்றார்.

தமிழர் பண்டிகையாம் தைப்பொங்கலை பாராம்பரிய விழாவாக அதிகாரபூர்வமாக அங்கீகரிப்பு வழங்கிய கனடா, மார்க்கம் நகரசபைக்கும் இந்த அங்கீகாரம் கிட்ட முன்னின்று உழைத்த அனைவருக்கும் யேர்மன் வெற்றிமணி சார்பாக பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.




**உலகை வலம்வர உங்கள் உற்றதுணை நாங்கள்!**

**Century Travels & Tours**



Europe Special : 99,00€ புகையிரத
Ticket to Paris மற்றும் நாடுகளுக்கும் எம்மிடம்
நேரில் வந்து மட்டுமே பதிவு செய்ய முடியும்.!
தொலைபேசிமூலம் பதிவு செய்ய முடியாது.
**München -COLOMBO-München**
(விஷேட விலையில்)
email : info@centurytravels.de
**Rhenische Strasse 29**
**44137 Dortmund.Germany** **Fax: 0231 5844665**

**Last Minute Tickets:**
02313975643
**குறைந்த விலையில்**
**பயணச்சீட்டுக்கள்**
**நேரடியாகத்**
**தொடர்பு கொள்ளுங்கள்!**
**நேரடித்தொர்பு:**
Number: 017621682149

**Tel: 0231 5896557,**
**Tel: 0231 5574319**




**Ram Nishanthan**
Dip.T.T.Mgt-IATA/UFTAA Montreal
**017621682149**
website : www.centurytravels.de
Mayuran **01772330010**

# காதோடு காதாக

**கலைக்கதிர். கதிர்.துரைசிங்கம்.**



## பிரபல நடிகை!

நிருபர்:
கன்னடத்தில் குழந்தை நட்சத்திரமாக ஆரம்பித்து இன்று தமிழ் நாட்டில் பிரபல கதாநாயகியாக உயர்திருக்கின்றீர்களே! உங்கள் வளர்ச்சியின் இரகசியம் என்ன.?

நடிகை:
ஏழுவயதில் சிறுமியாக நடித்தபோது உடைகள் மூலம் எனக்கு கிடைத்த விமர்சனங்கள்தான் என்னை இந்த நிலைக்கு உயர்த்தியது.

நிருபர்:
எப்படியான விமர்சனங்கள் அதன் பாதிப்பு பற்றிக் கூறுங்கள்.....

நடிகை: அன்று வயதுக்குமீறிய நடிப்பு. வயதுக்கு மீறிய உடைகள் வயதுக்கு மீறியவசனங்கள் என்று விமர்சித்தார்கள். அதனை மனதில் கொண்டு உடை, வசனம், நடிப்பு எல்லாவற்றையும் குறையோ குறை என்று குறைத்துக் கொண்டேன்.

### பரிமாண வளர்ச்சியில் ...



Lavatory மாற்றம் பெற்று Latrine ஆனது
Latrine மாற்றம் பெற்று Toilet ஆனது
Toilet மாற்றம் பெற்று Washroom ஆனது
Washroom மாற்றம் பெற்று Rest room ஆகிவிட்டது.

ஆனால் செய்யும் தொழிலே தெய்வம் என்று வந்த வேலையைச் செய்ய விடாது CellPhone, I Pad, Internet, Receving,Texting முதலியன தடை செய்கின்றனவே.

### ஒரு பிரபல சாமியாரிடம் சென்று:



கந்தோரில் வேலை செய்யும் சகபெண்களுடன் நான் தொழில் சம்மந்தமாகப் பேசுவதை எனது மனைவி சந்தேகத்துடன் பார்க்கின்றாள். பலசமயங்களில் என்னைத் தூக்கி எறிந்தும் பேசுகின்றாள்.
எப்படி என்னை மனைவிக்கு விளங்கவைப்பது. அதற்கு ஒரு உபாயம் கூறுங்களேன் குருவே.

சாமியார்:
மனைவிக்கு விளங்கவைக்கும் உபாயம் எனக்கு தெரிந்திருந்தால் நான் ஏன் சாமியாராகிரேன்!

# விவேக்கின் பய பக்தி





**சனி இடப்பெயர்வு விவேக்கின் நாத்தீகக் கொள்கையைப் பெயர்த்துவிட்டது!**

தான் நடிக்கும் படங்களிலெல்லாம் சாமி கும்பிடுபவர்களையும், வாஸ்து உளளிட்டவற்றை நம்புபவர்களையும், கடவுள் பக்தி உள்ளவர்களையும் சரமாரியாக விமர்சிக்கும், நக்கலடிக்கும், கிண்டலடிக்கும் காமெடி நடிகர் விவேக், திருநள்ளாறு சனீஸ்வரன் கோவிலுக்குப் போய் சாமியை பய பக்தியுடன் வணங்கிய விவரம் வெளியாகி யுள்ளது.
நாத்திகம் பேசுவோரில் பலரும் உள்ளுக்குள் ஆத்திகவாதிகளாகவே இருந்து வருகிறார்கள். அரசியல்வாதிகள் முதல் அத்தனை துறையினரும் இதற்கு விதிவிலக்கில்லை. திமுக தலைவர் கருணாநிதி ஒரு தீவிர நாத்திகர் என்பது அனைவருக்கும் தெரியும். ஆனால் அவரது குடும்பத்தினர் தீவிர ஆத்திகர்கள்.
அதேபோல சினிமாவில் விவேக்கைப் போல நாத்திகம் பேசியவர்கள் யாருமில்லை. நான் பெரியாரின் வழி வந்தவன் என்று பெருமை பொங்கக் கூறுவது விவேக்கின் வழக்கம். மேலும், தனது படங்களிலெல்லாம் ஆத்திகர்களை எவ்வளவு முடியுமோ அவ்வளவு கிண்டலடிப்பார் விவேக். குறிப்பாக வாஸ்து பார்க்கிறவர்களையும், நாள் நட்சத்திரம் பார்ப்பவர்களையும், சாமியை நம்பி காரியத்தில் இறங்குகிறவர்களையும் இவர் கிண்டல் அடிக்காத படமே இல்லை.

அப்படிப்பட்ட விவேக், திருநள்ளாறு கோவிலுக்குப் போய் சனீஸ்வரனை பய பக்தியுடன் வணங்கி விட்டு வந்துள்ளார்.
சமீபத்தில் சனிப்பெயர்ச்சி நடந்தது. இதையொட்டி திருநள்ளாறு கோவிலுக்கு பல லட்சம் பக்தர்கள் வந்து சனி பகவானை தரிசித்துச் சென்றனர். பரிகாரங்களைச் செய்தனர். சனிப் பெயர்ச்சிக்கு அடுத்த நாளான 24.12.2012 சனிக் கிழமையன்று அமாவாசை என்பதால் அது விசேஷதினமாக இந்துக்களால் கருதப்படுகிறது. இதையொட்டி அன்றும் பல லட்சம் பேர் சனி பகவானை தரிசித்து அருள் பெற்றுச் சென்றனர்.
அந்த நாளில்தான் காமெடி நடிகர் விவேக்கும் திருநள்ளாறு கோவிலுக்கு வருகை தந்தார். அவருடன் உள்ளூர் எம்.எல்.ஏ. சிவாவும் வந்திருந்தார். கோவிலுக்கு வந்த விவேக் ஒவ்வொரு சன்னதியாக சென்று பய பக்தியுடன் சாமி கும்பிட்டார். கோவில் பிரசாதத்தையும் பய பக்தியுடன் வாங்கிக் கொண்டார்.பய பக்தி என்பது இதுதானா?

**கற்பனை வளங்கள்**
எம் நாட்டில் அதிகம்.

ஏனென்றால்

**சில காலைப் பத்திரிகைகள்**
வாசித்தால் தெரியும்

**குரும்பசிட்டி
தம்பித்தரை ஐங்கரன்**




கலைநயத்துடன் அழகுறப் படம்பிடித்துத் தருகின்றோம்.

INDO AFRO TRAVELS
யேர்மனியில் Manheim நகரில்
Mit uns um die Welt
மிகவும் மலிவாகவும் உங்கள் தேவையை
ஒரே இடத்தில் பூர்திசெய்து கொள்ளவும் நாடுங்கள்...
Tel:0621 86 24 32 12
Fax:0621 86 24 32 14
S.J. Enterprises
Indo-Afro Travels
S.1-11
68161 Mannheim
தொடர்புகளுக்கு: ஸ்ரீதர்
Handy:0173 68 28 990
e.mail info@indo-afro.de


KIOSK & ASIAN MARKT
Lebensmittal
பசுமையான மரக்கறிகள்
கடல் உணவு வகைகள்
இன்னும் பலசரக்குப் பொருட்கள்
அனைத்தும் தரமாகவும் மலிவாகவும்
கிடைக்கும்.
Tel:02332 50 97 568
Hagener Str.158
58285 Gevelsberg
உரிமையாளர்: த.மனோகரன்


புதிய ஆய்வுத் தகவல்கள்

# சுவசுதிக் என்னும் ஓங்காரம் தமிழ் எழுத்தே! தமிழ் எழுத்தின் தொன்மை 8000 ஆண்டுகள்

## இந்திய எழுத்துமுறைக்கு யாழ்ப்பாணத் தமிழ் வழிகாட்டியுள்ளது

தொகுப்பு **சூ.யோ. பற்றிமாகரன்** BA, Special Diploma(Oxford),BSc, PGDiploma, MA








பின்லாந்து நாட்டுப் பேராசிரியர் “Corpus of Indus Seals and Inscription” என்னும் தலைப்பில் வெளியிட்ட 5000 சிந்து வெளி முத்திரைகளும், தமிழ்நாட்டில் பாறை ஓவியங்கள் மற்றும் பானை ஓடுகளில் கிடைத்த 500 சிந்துவெளி எழுத்துக்களும் முற்றிலும் தமிழ் எழுத்துக்களே என்று தமிழகத்தின் பேராசிரியர் இரா மதிவாணன் அவர்களால் படிக்கப்பட்டுள்ளது.

சிந்துவெளி எழுத்துக்கள் 417 குறியீடுகளைக் கொண்ட அசையெழுத்துக்கள் என வகைப்படுத்தியதன் மூலம் இவரால் இவ்எழுத்துக்கள் தமிழ் எழுத்துக்களே எனப்படிக்க முடிந்தது. பேரறிஞர் ஐ. மகாதேவன் அவர்கள் பட எழுத்தாகச் சிந்து வெளி எழுத்துக்களைப் படித்த பொழுது பொறையர் என அவர் படித்த குறியீடு ஒன்றுக்கு மூட்டை சுமப்பவர்கள் என்று பொருள் கூறினார். தமிழரசர்கள் மூட்டை சுமந்தார்கள் என்பது வரலாற்றுடன் பொருந்தாது என்னும் பேராசிரியர் இரா மதிவாணன் அசை யெழுத்துக்களாகவே சிந்து வெளி எழுத்துக்கள் உள்ளன என்று வாதாடுகின்றார் அவ்வாறே பின்லாந்துப் பேராசிரியர் ஆசுகோ பர்போலா மீன்படத்தையும் ஆறு கோடுகளையும் பார்த்து கார்த்திகை முருகன் என்ற விளக்கங்களைச் சொன்னதும் தவறென வாதாடும் இவர் தமிழர்கள் வணிக முத்திரையில் கடவுள் திருவுருவங்களைப் பொறிக்கும் பழக்கத்தை அக்காலத்தில் வழக்கமாகக் கொண்டிருக்கவில்லை என்பதைத் தனது வாதத்திற்கு ஆதாரமாக்கியுள்ளார்.

இந்தப் பின்னணியிலேயே 1994ல் புதுடில்லியில் நடைபெற்ற தொல்பொருள் ஆய்வு மாநாட்டில் சிந்துவெளி எழுத்துக்களைப் படிப்பது எப்படி என்ற தனது ஆய்வை இவர் வெளியிட்டார்.
சிந்துவெளி எழுத்துக்களை அரேபிய மொழி எழுத்துக்கள் போல் வலமிருந்து இடமாக எழுதப்பட்டது எனப் படித்தமை தவறு என்ற இவர் இந்திய மொழிகள் இடமிருந்து வலமாகவே எழுதப்படுகின்றன எனவே சிந்துவெளி எழுத்துக்கள் அம்முறையிலேயே எழுதப்பட்டுள்ளன என்றார்

சிந்து வெளியில் காணப்படும் எண்கள் தமிழர்கள் எழுதும் இடமிருந்து வலம் என்னும் முறையிலேயே எழுதப்பட்டுள்ளன என்பதையும் இவர் நிறுவினார்.

இந்தப் பின்னணியில் இன்று இவர் பாண்டிய மன்னன் காய்ச்சினவழுதியினால் அமைக்கப்பட்ட முதல் தமிழ்க்கழகத்தில் ஓவிய எழுத்தான பட எழுத்து இருந்தது என்கின்றார். வெண்தேர்ச் செழியன் அமைத்த கி. மு 6000ம் ஆண்டளவில் இருந்த இரண்டாம் தமிழ்க்கழகத்தில் சிந்துவெளி எழுத்து என்னும் அசையெழுத்து வழக்கில் இருந்ததாகக் கூறுகின்றார். பாண்டியன் முடத்திருமாறன் அமைத்த கி மு 1850ம் ஆண்டளவில் இருந்த மூன்றாம் கழகத்தில் தமிழி எழுத்து முறை இருந்தது என்றும் இதுவே தென்பிராமி என்று பின்னர் பெயர் பெற்றதென்றும் இவர் மேலும் விளக்குகின்றார்.

ஈழத்திலும் தமிழகத்திலும் காணப்படும் கீறல் எழுத்துக்கள் என்னும் கிறுக்கல்கள் (கிராபிட்டி) சிந்துவெளி எழுத்துக்களே. கீறல் குறியீடு என்பது தனிமனிதர்களின் கையெழுத்து வேறுபாட்டால் தோன்றியதே என்னும் பேராசியர் இரா மதிவாணன் சிந்துவெளி எழுத்திலிருந்து தென்பிராமி எனப்படும் தமிழி தோன்றிய பின்னர் முன்னர் இருந்த எழுத்துக்களையும் பின்னர் உருவான எழுத்துக்களையும் கலந்து எழுதும் தன்மையும் குறித்த காலத்துக்குத் தொடர்ந்துள்ளது. இதனையே கலப்பு எழுத்துக்கள் என்பர். இதற்கு உதாரணமாகத் தமிழகத்தின் விழுப்புரம் மாவட்டம் மருங்கூரில் கிடைத்த முதுமக்கள் தாழியில் முதலிரு எழுத்துக்களும் அம் எனத் தமிழியிலும் பின் இரு எழுத்துக்களும் மூவன் எனச் சிந்துவெளி எழுத்திலும் அமைந்து 'அம்மூவன்' என எழுதப்பட்டிருப்பதைச் சுட்டிக் காட்டுகின்றார்

சிந்துவெளி எழுத்தில் இன்றைய தமிழைப் போலவே 12 உயிர்களும் 18 மெய்களும் இடம்பெற்றுள்ளன. இந்த 30 எழுத்துக்களைத் தவிர மற்றயவை கோட்டெழுத்துக்கள் என்பது இவரின் கண்டுபிடிப்பு.
தமிழ்ப்புலவர்ககள் அசையெழுத்து முறையை மாற்றி தமிழ் எழுத்து முறையை கி. மு 1850ல் வழக்குக்குக் கொண்டு வந்துள்ளனர் என்பது இவர் தரும் செய்தியாக உள்ளது
இக்காலகட்டத்தை அடுத்து ஐந்திரனார் எழுதிய ஐந்திரம் என்னும் தமிழ் இலக்கணம் சிந்து வெளியில் இருந்து பிறந்த தமிழி என்னும் தென்பிராமியிலேயே எழுதப்பட்டது என்பது இவரின் கருத்து.
இதனைப் பின்னர் வடஇந்தியப் பாலி, பிராகிருதம், திபெத்து மொழி, தமிழ் ஆகிய மொழிகள் பின்பற்றி அவற்றுக்கான இலக்கணங்களை வகுத்துள்ளன. பிராகிருத மொழியின் காதந்திர இலக்கணமும், பாலி மொழியின் கச்சாயண இலக்கணமும், திபேத்திய மொழியின் சன்- சு- பா இலக்கணமும் தமிழ் மொழியின் தொல்காப்பியமும் ஐந்திரன் வழி வந்து இன்று வரை நிலவும் இலக்கண நூல்கள்.
சிந்துவெளி மொழியில் உள்ள தமிழ் இலக்கணக் கட்டமைப்பும் கி. பி 5ம் நூற்றாண்டு வரை இந்தியாவின் எழுத்து முறையாக இருந்த தமிழி இலக்கணக் கட்டமைப்பு எழுத்து முறைகளும் ஒன்றாக உள்ளன.
தமிழ் பிராமி எழுத்தே வடஇந்தியாவில் அசோகனின் பிராமி எழுத்துக்களுக்கு மூலமாக அமைந்தது.
சுவசுதிக் எனப்படும் ஓங்காரக் குறியீடு ஓம் என்னும் தமிழ் எழுத்துக்களே என இவரால் படித்துக்காட்டப்பட்டுள்ளது. இவ் ஓங்காரக் குறியீடு கி மு 6000ம் ஆண்டைச் சேர்ந்ததெனப்படும் மெகர்க்கார் அகழ்வாராய்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்டது.

இதன் அடிப்படையில் தமிழ் எழுத்துக்கள் 8000 ஆண்டுகள் பழைமை வாய்ந்த வரலாற்றைக் கொண்டுள்ளது என இவரால் நிறுவப்பட்டுள்ளது.

இவ்விடத்தில் யாழ்ப்பாணப் பல்கலைகழகத்தின் வரலாற்றுத்துறைப் பேராசிரியர் புஷ்பரத்தினம் அவர்கள் யாழ்ப்பாணத்தில் அக்காலத்தில் காணப்பட்ட தமிழ் எழுத்துக்கள் தமிழ் பௌத்தத்தின் வழி தமிழ்நாடு சென்று அங்கிருந்து அசோகப்பேரரசுக்குச் சென்றது என்பது நினைவுக்கு வருகிறது.
அவ்வாறாயின் இந்திய எழுத்துமுறைக்கு யாழ்ப்பாணத் தமிழ் வழிகாட்டியுள்ளது என்பது வரலாற்றுப் பெருமைதரு செய்தியாகிறது.

யேர்மனியில் Düsseldorf நகரில் இருந்து

**சுவை பாட்டி சேவை**



உங்கள் வீட்டு மங்கல வைபவங்களுக்கு சுவையாக உணவு செய்து தரக் காத்திருக்கின்றோம்.
கொத்துரொட்டி, இடியப்பம், என நீங்கள் விரும்பும் உணவுகள் 1000 பேர் என்றாலும் வந்து பரிமாறுவோம்.
மேலும் குறைந்த அளவு உணவு உடன் தேவை என்றால் 2 மணிநேரத்திற்கு முன் ஓடர் செய்தால் உடன் சுடச்சுட செய்து தரப்படும்.

தொடர்பு கொள்ள...
உதயகுமார்:
0211 167 577 89 ,0211 688 5 9 67
Handy: 0163 690 8151

**திருக்கணித ஜோதிடம்**

ஜாதகக் குறிப்பு எழுதுதல்
விவாகப் பொருத்த நிச்சயம்
சுபமுகூர்த்தம் வைத்தல்
ஜோதிட ஆலோசனைகள்
திருமணம்
பூப்புனித நீராட்டு விழா
புண்ணியாகவாசனம்
சிரார்த்தம்
கடைத்திறப்பு விழா
கோயிற்கிரியைகள்
கிரகசாந்தி





சிவஸ்ரீ க.சபாநாதகுருக்கள்
Kreuzeskirchstr. 40
45127 Essen
Tel: 0201-652450

# கோப்பி புற்றுநோய் வரவிடாது விரட்டுகிறதாம்!




**மெல்லப் பேசுங்கள்! இல்லையேல் கோப்பி விலை அதிகரித்துவிடும்!**

கோப்பி பற்றி ஒரு பத்திரிகைச் செய்தியைக் காப்பி அடித்துள்ளேன். அவர்களும் ஆய்வாளர் களின் அறிக்கையைக் காப்பி அடித்துளார்கள். என்ன தான் விசயம். மோத்தத்தில் எல்லாமே காப்பி மயம்.

கோப்பி குடிக்க வேண்டும் அதுவும் நிறையக் குடிக்க வேண்டும் . அப்படிப் பட்டவர்களைப் புற்று நோய், குறைந்தது நான்கு வகையான புற்று நோய் எட்டிப் பார்ப்பதற்குக் கொஞ்சம் தயக்கம் காட்டச் செய்யுமாம். நம்ப முடியவில்லையா? இதோ அவை, எவை எவை?

### 1. கார்ப்பச் சீதச் சவ்வுப் புற்று நோய் ( Endometrial cancer):

கர்ப்பப் பையினது சுவர் மூன்று வகையான இழையப் படைகளைக் கொண்டது. வெளிப்புறத்திலே உள்ளது ஒருகலப்படை தடிப் புடைய கர்ப்பப் பை சுற்று மேலணி ( perimetrium) உட் பறத்திலே உள்ள அகவணியையே கர்ப்பப் பை சீதச் சவ்வு (endometrium) என்பார்கள். இதுவும் ஒரு கலப்படை தடிப்புடையது. இவை இரண்டுக்கு மிடையே உள்ள இடையணி ( Myometrium) தொடுப்பிழையத்தினால் ஆனது. பெண்கர்ப்பம் தரித்தால் இந்த இடையணியே தடித்து குருதிச் செறிவுடையதாகிறது. விருத்தியுறுகின்ற முளையத் திற்கும் தாயின் கருப்பையினுக்கும் இடையே ஏற்படுகின்ற சூல் வித்தகம் ( placenta) இங்கே தான் தோன்றுகிறது.





கோப்பி குடிக்காத பெண்களுக்கும் தாரளமாகக் கோப்பி உட்கொள்ளும் பெண்களுக்கும் இடையே நடைபெற்ற ஆய்வின் படி கோப்பி உட்கொள்ளும் பெண்களுக்கு கோப்பிப் பக்கமே தலை வைத்தும் சாயமாட்டேன் எனச் சத்தியம் செய்யும் பெண்களைவிட 25% மேற்படியான் வரும் சாத்தியம் குறைவு என்கிறார்கள்.

ஆகவே வீட்டினை விட்டுத் தர்மபத்தினியுடன் வெளியே போகும் போது ஒரு முறை TimHorton (கனடாவில் பிரபலமான கோப்பிக்கடை) பக்கம் பார்வையைத் திருப்புவது நன்று தானே!. ஒரு முறை நான்கு கிண்ணம் கோப்பியைத் தாராளமாக உட் செலுத்தலாமாம்.

### 2. முன்னிற்கும் சுரப்பிப் புற்று நோய் ( Prostate cancer).

நல்ல காலம் இந்தப் பிரச்சினை பெண்கள் பக்கம் எட்டிப் பார்ப்பதில்லை. சுரப்பி இருந்தால்தானே இந்த வில்லங்கம்! ஆனால் கணவனது பிரச்சினை மனைவிக்குந்தானே ஆகவே வெளியே போகையில் 'ஏன் பாருங்கோ ஒருக்கால் Tim Horton பக்கமாகப் போவோமா' என்று கேட்பதில் குறையில்லைத் தானே. பெண்களில் யோனி வாயிலுக்கருகே காணப்படுகின்ற சுரப்பி ஒன்றினை Skien's சுரப்பி என்பார்கள். அதனை ஆணின் முன்னிற்கும் சுரப்பியினுக்கு அமைப் பொத்த சுரப்பி என்பார்கள்.




ஆனால் அச்சுரப்பி இந்நாள் வரை அப்பாவியாகத் தான் இயங்கி வந்துள்ளது. ஆண்களினது அட்டூழியம் பாருங்கோ!

ஆண்களிலே இந்த முன்னிற்கும் சுரப்பி சிறு நீர்ப் பையின் கீழே சிறுநீர் வழியின் தொடக்கத்திலே அதன் கழுத்தினைச் சூழ்ந்து காணப்படும். குதிரை லாடனை ஒத்த ஒரு சரப்பி. 40 அல்லது 45 வயதிற்கு மேலே ஆண்கள் பலருக்கு இது ஒரு பிரச்சினை. இது கொஞ்சம் புடைக்க, அதன் காரணமாக சிறு நீர் வழியினை ஒடுங்க வைத்து விடுகிறது. இதனால் ஆண்களுக்கு சிறு நீர் கழிப்பது பிரச்சினை ஆகி விடுகிறது. சிறுநீர் பையிலே உள்ள சிறு நீரை வெளியேற்றுவது கஷ்டம் ஆனால் சிறு நீர்கழிக்க வேண்டும் என்ற உணர்வு இருந்து கொண்டே இருப்பதால் பெரும் அவஸ்தை. சில சமயங்களில் சமய சந்தர்பம் பார்க்காமல், 'வெளியேற்று அல்லது உடுப்பினை நனைத்து மானபங்கம் செய்து விடுவேன்' என எச்சரிக்கை விடுவதும் உண்டு. குடும்ப வைத்தியரிடம் போனால் ஒருக்கால் P.SA ( Prostate specific Antigen) பார்க்கலாம் என குருதியை ஆய்கூடத்துக்கு அனுப்புவார்கள். கட்டாயமாக $ 30 கொடுத்தே தீரவேண்டும். இதன் பெறுபேறு உண்மையில் முன்னிற்கும் சுரப்பிப் புற்று நோய் உள்ளதா இல்லையா எனத் தீர்மானிகச் செய்யும். அடுத்து சிறுநீரகவியல் வைத்தியரிடம் ( Urologist) போய் ஆவன செய்யவேண்டும் அதைப்பற்றி எல்லாம் இங்கே வேண்டாம்.

முன்னிற்கும் சுரப்பிப் புற்று நோய் ஆண்கள் பலரிடம் தஞ்சம் புகுகிறதை அறிந்திருப்பீர்கள். இங்கே உன்னுடைய சேட்டை பலிக்காது என்று சிறப்பு கோப்பிக்கு உள்ளது என இரண்டு வாரங்களுக்கு முன்வந்த ஆய்வு அறிக்கைகள் ஆணித்தரமாக எடுத்துக் கூறுகின்றன. ஆகவே ஆண்களே! இதோ விமோசனம் ! தினசரி ஒன்று முதல் ஆறு கிண்ணம் வரை கோப்பி குடியுங்கள்.

### 3. தோல் புற்று நோய் அல்லது அடிப்படைக் கலப் புற்று நோய் ( Basal Cell Carcinoma BCC).

நமது தோலில் வெளிப்புறத்தே உள்ளது மேற்றோல் ( Epidermis), இது முழுக்க முழுக்கக் கலங்களால் ஆனது. இதன் கீழே உள்ளது உட்டோல். (Dermis) அங்கே தான் தொடுப் பிழையம் குருதிக் கலன்கள் எல்லூாம் உள்ளன. மேற்றொலின் அடியிலே உள்ள கலப்படை வட்டவடிவான கலங்களைக் கொண்டது. இக் கலங்களை அடித்தளக் கலங்கள் (basal cells) என்பார்கள். இக்கலப்படை முளைப் படை எனப் படுகிறது ( Germinative Layer). இங்கேயே தோலி னைப் புதுப்பிக்கின்ற கலங்கள் புதிது புதிதாகத் தோன்றுகின்றன. சூரிய ஒளி அடிப்படைக் கலங்களைத் தாக்குகின்றமையால் புற்று நோயினுக்கு முன்னான கலங்கள் ( Precancerous Cells) தோன்றுகின்றன. இக்கலங்கள் வேகமாகப் பெருகுவதால் தோல் புற்று நோய் தோன்றுகிறது. ஆகவே தோல் புற்று நொயினைக் கட்டுப்படுத்த வேண்டுமாயின் ஈன இரக்கம் பார்க்காமல் இந்தப் புற்று நோயினுக்கு முன்னான கலங்களைக் கொன்று விடுதலே. கோப்பியில் உள்ள க.்.ப்பீன் (caffeine) இக் கலங்களை ஊடறுத்து அவை வந்த அறிகுறியே இல்லாமல் புதைத்து விடுகிறதாம். ஆண்களுக்கு கோப்பி அருந்துதல் BCC வராமல் தடுக்கின்ற சாத்தியம் 9% என்றால் அது பெண்களுக்கு 20% ஆக உள்ளது. பெண் என்றால் பேயும் இரங்குமல்லவா! ஆகவே தினசரி மூன்று கிண்ணம் குடிக்கலாம். இந்தக் குடி குடியைக் கெடுக்காது.

### 4. மார்புப் புற்று நோய்: (Breast cancer)

ஒழுங்காகக் கோப்பி அருந்தும் பெண்களுக்க மாதவிடாய் நின்ற பின்னர் 20 முதல் 50 % வரை மார்புப் புற்று நோய் வருவதில் இருந்து பாதுகாப்புக் கிடைக்கிறதாம். மொத்தத்தில் கோப்பி அருந்துவது ஆண்களிலும் பார்க்கப் பெண்களுக்கே கூடுதலான ஆனுகூலம் தரவல்லது போலத் தெரிகிறது. காலை எழுந்ததும் அரக்கப் பரக்க வேலை செய்பவர்கள் ஒரு கோப்பியில் முழித்தால் நல்லதல்லவா?

கனக்ஸ்

Dortmund நகரில் மீண்டும்
உங்களுக்காக U க்கு முன்பாக



14.12.2011 Dortmund
நகர பிதாவினால்
திறந்து வைக்கப்பட்ட
எங்கள் உணவகம்....

புதிய அமுதசுரபி
இலங்கை இந்திய தமிழர் உணவகம்

வட இந்திய ,இலங்கை உணவு வகைகளைச்
சுவைத்து மகிழ ஓர் உணவகம்!

Öffnungszeiten
Mo- bis -Sa.11.00 - bis - 23.00
So-und Feiertage
12.00 bis15.00 Uhr

Mittag Buffet
Mo-bis Sa-11.00.15.00 Uhr
Nur 5,50€

Tel:0231 91 09 89 50

Rheinische Str,20
44137 Dortmund
Tel:0231/ 91 09 89 47 Fax:0231 530 176 82





# முதலிரவு

மோகன்தாஸ்

அவள் வருவதற்குள் பார்த்து முடித்துவிடவேண்டும் என்று நினைத்துக்கொண்டே, வேகவேகமாக மின்னஞ்சல் பெட்டியை திறந்துகொண்டிருந்தேன். என் நேரம், கதவு திறக்கும் சத்தம் கேட்டதாலும், இனிமேல் முடியாது என உணர்ந்ததாலும், மடிக்கணினியை மூடும் வேலையை செய்யத் தொடங்க...

கொலுசுச் சத்தம், அவள் நெருங்கிவருகிறாள் என்பதை உணர்த்த, திரும்பிப் பார்த்தேன். எங்கள் வீட்டில் கொலுசுச் சத்தம் கேட்பதில்லை பெண் குழந்தை இல்லாத காரணமோ என்னமோ, தெரியாது. அம்மா அணிந்திருக்கும் கொலுசு சத்தம் தராது. ஆனால் அதற்காக வருபவளை குற்றம் சொல்ல முடியுமா? திருமணம் முடிந்த முதல்நாள் அன்று, என்பதற்காக மட்டும் கிடையாது. ஒருவேளை அவளுக்கு மிகவும் பிடித்தமான விஷயங்களில் ஒன்றாகக் கூட கொலுசு இருக்கலாம்.

அவளைப் பற்றி எனக்கு என்ன தெரியும்? யோசித்துப் பார்க்கிறேன். பெயர் அலமேலு, படித்தது ஹோலிகிராஸ் கல்லூரியில் முது அறிவியல் கணிப்பொறி பயன்பாட்டியல், அவ்வளவுதான். இதற்கு முன்னர் வெகுசில சமயந்தான் அவளைப் பார்த்திருக்கிறேன் ஒரு முறை நிச்சயதார்த்தத்தின் பொழுதும் பிறகு கல்யாணப் புடவை எடுக்க வந்தபொழுதும். பின்னர் இன்று கல்யாண மேடையிலும் பின்னர் திருமணம் முடிந்தபின்னர் கோவிலிலும்.

இருவரும் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளவில்லை, இடையில் வந்து பரிசளித்த என் பக்கத்து உறவினர்களை நானும் அவள் பக்கத்து உறவினர்களை அவளும் அறிமுகம் செய்து வைத்ததைத் தவிர.

கல்யாணத் திற்காக நினைத்த நாட்கள் விடுமுறை எடுத்துக்கொள்ள அனுமதியளித்த அலுவலகம், ஒரேயொரு கட்டளை யிட்டிருந்தது அது மின்னஞ்சலில் அனுப்பப்படும் பிரச்சனை சார்ந்த கேள்விகளுக்கு உடனடியாக பதிலளிக்க வேண்டும்மென்பது. திருமணத் திற்கு முந்தைய நாள் வரை அமைதியாக இருந்த அம்மா, திருமண நாளன்று என் மடிக்கணினியை பிடுங்கி வைத்துக்கொண்டது தான் சோகமே. ஒரு நாள் முழுக்க வந்த அஞ்சல்களைப் படிக்க வேண்டித்தான் நான் முதலிரவு என்றுகூட பார்க்காமல் மடிக்கணினியை உபயோகித்துக் கொண்டிருந்தேன்.

நினைவு தெரிந்ததிலிருந்தே நான் உபயோகப்படுத்திய அறைதான், சினிமாவில் காண்பிப்பதைப் போன்று பூத்தோரணங்களால் அலங்கரிக்கப்படாத நான் உபயோ கப்படுத்திய அதே பழைய கட்டில், ஒரேயொரு வித்தி யாசம் ஒன்றிற்கு இரண்டாய் தலையணைகளும், சற்றே பெரிய படுக்கை விரிப்பும்.

உள்ளே வந்தவள், மிருதுவாய் அலங்கரிக்கப் பட்டிருந்தாள். பயணக் களைப்பு அவள் முகத்தில் தெரிந்தது் கல்யாணப்புடவைதான் அணிந்திருந்தாள் இது என் அம்மாவின் வேண்டுகோளாயிருக்குமென்று நினைக்கிறேன். அவள் முகத்தைப் பார்த்ததிலிருந்தே மணியம் செல்வத்தின் ஓர் ஓவியம் உருக்கொண்டு வந்ததைப் போன்ற உணர்வுதான் ஏற்பட்டது. நீண்ட கண்கள், செழுமையான புருவங்கள், அளவான நெத்தி, நீண்ட சடை, கானலை போலில்லாமல் காணும்படியான இடைகள் ஒன்றுதான் வித்தியாசம் அந்த ஓவியங களுக்கும் இவளுக்கும்.

”உங்களுக்கு வேலையிருந்தால் முடித்துவிடுங்கள். பரவாயில்லை.” ஓவியம் அசைந்து பேசுவதுபோல் தான் இருந்தது. பின்னர் நினைவிற்கு வந்தவனாய், ”இல்லை முடிஞ்சிருச்சு. நிக்கிறியே உட்காரு!” சொன்னவனாய் மடிக்கணினியை மடியில் இருந்து பிரித்து அந்தப் பக்கம் வைத்தேன்.

”இல்லை கொஞ்சம் எந்திருச்சி நின்னீங்கன்னா...”

நான் அவசரமாய், ”இங்கப்பாரு இன்னிக்கின்னு மட்டுமில்லை, என்னிக்குமே நீ என் காலில் விழணும் அப்பிடின்னு அவசியம் இல்லை. எனக்கு பிடிக்காத ஒருவிஷயத்தில இதுவும் ஒன்னு. பரவாயில்லை உட்காரு.”

”இல்லை அம்மா சொல்லியிருக்காங்க...”

”உங்கம்மாவா, பரவாயில்லை நாளைக்கு கேட்டாங் கன்னா விழுந்தேன்னு சொல்லு, என்கிட்ட கேட்டாங் கன்னா நானும் சொல்றேன்.” சொல்லிவிட்டு அவளைப் பார்த்தேன். குழப்பமாய் இருப்பதாய்ப் பட்டது, மெதுவாக கட்டிலில் என் அருகில் உட்கார்ந்தவளிடம், ”இன்னிக்கு உன்கிட்ட நிறைய பேசணும், பேசலாமா?”

எனக்கு அவள் எப்படிப்பட்ட பெண் என்று தெரியாது, அதுமட்டுமில்லாமல், பெண்களுடனான என் அறிமுகமும் மிகக்குறைவே, என் அம்மாவைத்தவிர நான் பெண் களிடம் நெருக்கமாய்ப் பழகியதில்லை. ஆரம்பத்தி லிருந்தே இருபாலரும் படிக்கும் பள்ளி, கல்லூரியில் படித்தாலும் கூடப்படிக்கும் பெண்களுடன் சண்டை போட்டிருக்கிறேனே ஒழிய, சாதாரணமாய் பழகிய தில்லை. அந்தப் பெண்களிடம் எதிரி போன்ற ஒரு உருவகத்தையே பெரிதும் எடுத்திருக்கிறேன்.

”ம்ம்ம்...” அவ்வளவுதான் பதில் வந்தது.

”எனக்கு உன்னைப்பத்தி எல்லாம் தெரியணும், உனக்கு என் னென்ன பிடிக்கும், பிடிக்காது, எதைப் பத்தி யெல்லாம் தெரிஞ்சிக்க ஆசைப்படுற, என்னைப் பத்தி என்ன தெரியணும். இன்னிக்கு உன்னைப் பத்தி நானும் என்னைப் பத்தி நீயும் தெரிஞ்சிக்கணும். அதுதான் முக்கியம்.”

”நான் உங்களை சில கேள்விகள் கேட்கலாமா?” கேட்டுவிட்டு என்னையே பார்த்தாள்.

”நிச்சயமா, கேளு!”

”உங்களுக்கு எதாவது கெட்ட பழக்கம் இருக்கா?” எனக்கு இந்தக்கேள்வி ஆச்சர்யத்தை அளிக்கவில்லை. எதிர்பார்த்ததுதான், ஆனால் முதல் கேள்வியாக இருக்குமென நினைக்கவில்லை.

”புரியலை, நீ கெட்ட பழக்கம்னு எதைச் சொல்லவர்ற? சிகரெட் பிடிக்கிறது, இல்லை தண்ணியடிக்கிறதப் பத்தி கேக்கறன்னா, கிடையாது. வேற எதையாச்சும் பத்தின்னா குறிப்பா கேட்டாத்தான் சொல்ல முடியும்.” சொல்லிவிட்டு சிரித்தேன், ஏனென்றே தெரியாமல்.

”இல்லை நீங்க குறிப்பிட்டதைத்தான் கேட்டேன், ஏன் நீங்க அந்த தப்பையெல்லாம் பண்ணலை?”

ஆச்சர்யமான கேள்வி! பலர் இந்தக்கேள்வியை என்னிடம் கேட்டதில்லை, இந்தக் கேள்விக்கான பதில் எனக்குத் தெரிந்துதான் இருந்தது,

”உண்மையைச் சொல்லவா?”

”அது உங்கள் விருப்பம்.” சிரித்தாள். முதல்முறை இப்பொழுதுதான் விகல்பமில்லாமல் அவள் சிரிப்பதாய்ப் பட்டது. கல்யாண மண்டபத்தில் பரிசுப்பொருள்கள் கொடுத்துக்கொண்டிருந்த பொழுது இருந்த அவளுடைய சிரிப்பில் இருந்து தற்போதைய சிரிப்பு வித்தியாசமாய் இருந்தது. அந்தச் சிரிப்பில் ஒரு செயற்கைத் தன்மையிருந்தது.

”சரி சொல்றேன், உண்மையா இல்லையான்னு நீதான் முடிவு பண்ணணும். எங்கப்பா தண்ணியடிப்பாரு, சொல்லப்போனா தினமும் அதனால் ஏற்படும் பிரச்சனை களை நேரில் இருந்து பார்த்தவன்ங்கிறதால தண்ணியடிக்க முடியலை.

சிகரெட் பத்தி கேட்டீன்னா, என் மாமா சிகரெட் குடிப்பான் அவன் அதை நிறுத்த முடியாம தவிக்கிறதை நேரில் பார்த்திருக்கேன். இதெல்லாம் ஆரம்பத்தில் நான் தவறு செய்யாம இருந்ததுக்கு காரணம் இப்ப வரைக்கும் அது தொடருதுன்னா அதுக்கு காரணம்...” நான் அங்கே நிறுத்திவிட்டு அவளைப் பார்த்தேன். அவள் மிகவும் ஆர்வமாய் நான் சொல்லப் போகும் பதிலுக்காகக் காத்திருந்தாள்.

”எனக்கு நெத்தி கொஞ்சம் பெரிசுங்கிறதால, ஒரு தாழ்வு மனப்பான்மை உண்டு. அதனால என்னைக் கல்யாணம் பண்ணிக்கப்போற அழகான பொண்ணுக்கு பரிசா எதையாவது கொடுக் கணும்னு ஆசைப்பட்டேன். அதுதான் இன்னிவரைக்கும் தொடர்ந்துட்டு வர்றேன். இனிமேலும் என்னை நல்லவனா காப்பாதிக்க வேண்டியது உன் பொறுப்பு.” சொல்லிவிட்டு நான் சிரிக்க அவள் சிரிக்காமல் என் கண்களையே பார்த்துக் கொண்டிருந்தாள். ”நம்ப முடியலையா?”

அவள் அதற்கு பதில் சொல்லாமல் அடுத்த கேள்வியில் இறங்கினாள்.

”நீங்க யாரையாவது காதலிச்சீங்களா?” அவள் வாய்தான் பேசியதேயொழிய கண்கள் என் கண் களையே உற்று நோக்கிக் கொண்டிருந்தன் உண்மை யை மட்டும் உறிஞ்சக் கூடிய அன்னங்களாய்.

”உண்மையைச் சொல்லணும்னா, இந்தக் கேள்விக்கு பதிலளிக்க சில விளக்கம் வேணும், காதலிச் சீங்களான்னு கேட்டா ரொம்ப பொதுவான விஷயம். சின்ன வயசிலேர்ந்தே எனக்கு நிறைய இனக் கவர்ச்சி இருந்திருக்குது, எட்டாவது படிக்கும் பொழுது பக்கத்தில் பரிட்சை எழுதிய ஆறாவது படிக்கிற பொண்ணு, முதல் முதல்ல பாப் அடிச்சு நான் பாத்த எதிர்த்த மாடிவீட்டுப் பொண்ணு, அந்த பொண்ணு வீட்டுக்கு எதிர் வீட்டில் இருந்த, உன்னை மாதிரியே ஓவியமா தெரிந்த, ஒரு ஆன்ட்டி, இப்படி பல பெண்ணுங்களை எனக்கு பிடிச் சிருந்தது் இன்னிக்கு வரைக்கும் பிடிக்கும் ஆனா ஒன்னு ரெண்டு வார்த்தைகளைத் தவிர அதிகமா இவங்க யார்கிட்டையுமே நான் பேசினது கிடையாது. இல்லை, நான் உண்மையிலேயே யாரையாவது காதலிச் சேனான்னு கேட்டீன்னா இல்லைன்னுதான் சொல்வேன் அதுக்கும் என்னோட தாழ்வு மனப்பான்மைதான் காரணம்னு வைச்சுக்கோயேன்.”

நான் சொல்லச் சொல்ல அனைத்தையும் கேட்டுக் கொண்டிருந்தவளின் முகத்தில் உணர்ச்சியே இல்லையா கையால், ”ஏய் என்ன நான் சொன்னதை நம்ப முடியலையா?”

”இல்லை இதைப் பத்தி எனக்கு முன்னாடியே தெரியும். உங்கம்மாகிட்ட நான் பேசிக்கிட்டுத் தான் இருந்தேன். அவங்க நீங்க சொன்ன அத்தனையையும் சொன்னாங்க, ஒருவரி விடாம. இன்னோன்னும் சொன்னாங்க.”

”என்ன சொன்னாங்க?”

”நீங்க இனிமேலும் தண்ணியடிக்காம, சிகரெட் பிடிக்காம இருக்கிறதுக்கு உத்திரவாதம் தர்றதாகவும் ஆனால் இன்னொரு பொண்ணு பின்னாடி போக மாட்டீங்கங் கறதுக்கு உத்திரவாதம் தரமுடியாதுன்னும், நான்தான் காப்பாதிக்கணும்னும் சொன்னாங்க.” சொல்லிவிட்டுச் சிரித்தாள்.

எனக்கும் தெரியும் எங்கம்மா இதை சொல்லியி ருப்பார்கள்தான் அக்கா என்ற ஒருத்தி இல்லாத காரணத்தால் என் சம்மந்தப்பட்ட அத்துனை நிகழ்ச்சி களும் அம்மாவிற்குத் தெரியும். அதுமட்டுமில்லாமல் நான் அம்மாவை வம்பிழுக்க சில சமயங்களில் அதிகமாகவே என்னை பாதித்த பெண்களைப்பற்றி சொல்லியது கூட காரணமாக இருக்கலாம்.

தொடர்ச்சி.10ம் பக்கம்.


Gnanam's Travels

சகலநாடுகளுக்கும் சென்றுவர யேர்மனியில் இருந்து குறைந்த கட்டணத்தில் இலகுவாக விமானச் சீட்டுக்களைப் பெற்றக்கொள்ள நாடவேண்டிய இடம்

Tel: 0214 870 924 39 , 0214 3127407 Fax:0214 8924 952

Gnanam Asia

Mini Market and Silk House

இல்லத் தேவைகளை நிறைவு செய்ய நாடுங்கள். உடன்
மரக்கறி வகைகள் கடலுணவுப் பொருட்கள்
மளிகைப் பொருட்கள் மற்றும் தொலைபேசி அட்டைகள்
நீங்கள் விரும்பும் அழகிய ஆடைகள் இவற்றுடன் அனைத்து
தையல் வேலைகளும் செய்து தரப்படும்

Von-ketter Str.32
51371 Leverkusen
Tel: 0214 312 3565, Fax. 0214 892 4952
Mobil:0177-5054286,



HK Hammacher

ஆங்கிலம், யேர்மன், பிரஞ், துருக்கி மொழிகளில் வகுப்புக்கள் உண்டு. பரீட்சைக்கு வரக்கூடிய வினாக்கள் சிறப்பாக தெரிவுசெய்து கற்பிக்கப்படும்.



தமிழில் தொடர்புகளுக்கு: 0172 57 35 454

HK Hammacher
Schleswiger Str .5
44145 Dortmund
Germany
0231 81 55 94
0173 56 46 651

MPU
ASF
ASP

இவர்களுக்கான சிறப்பு வகுப்புக்களும் உண்டு!






செல்வி. ஜெனனி ஜெயபாலன் அவர்களுக்கு 2011 ஆண்டுக்கான அதி உயர் விருது!

Oriental Examination Board London அதன் இயக்குனர் திருமதி.அம்பிகா தாமோதரம் தலைமையில் Preston Manor School,Wembley,London என்னும் நகரத்தில் 12.11.2011 அன்று நடாத்தப்பட்ட 2011 ம் ஆண்டுக்கான பட்டமளிப்பு விழாவில், ஜேர்மனி வெல்பேர்ட் நகரத்தைச் சேர்ந்த செல்வி. ஜெனனி ஜெயபாலன் வாய்ப்பாட்டு, வயலின் இரண்டுக்குமான சங்கீதக்கலாஜோதி பட்டம் பெற்றுக் கௌரவிக்கப்பட்டதுடன், அதியுயர் திறமைக்கான 2011 ம் ஆண்டுக்குரிய தங்கப்பதக்கத்தையும் பெற்றுக் கௌரவிக்கப்பட்டார். இவர் சங்கீத ஆசிரியை திருமதி. மீரா நித்தியானந்தன், வயலின் வித்துவான் திரு. ராதாகிருஷ்ணன் ஆகியோரின் மாணவியும் ஆவார்.

*படித்ததில் கிடைத்தது...*

## கூட்டு மனப்பான்மை



ஒரு கிராமத்தில் இரண்டு கிணறுகள் இருந்தன. ஒன்று அரண்மனையில் இருந்தது. அதை மந்திரியும் அரச குடும்பத்தினரையும் தவிர வேறு யாரும் உபயோகிக்க முடியாது. மற்றொன்று ஊரின் நடுவே இருந்தது. அதை மற்ற அனைவரும் உபயோகித்தனர்.

ஆனால் ஒருநாள், ஒரு மந்திரவாதி அந்த ஊருக்கு வந்து சில மந்திரங்களை கூறிக் கொண்டே ஏதோ ஒன்றை அந்த பொது கிணற்றினுள் போட்டான்.

மக்கள் எல்லோரும் அதைப் பார்த்துக் கொண்டிருந்தனர். ஆனால் யாருக்கும் என்ன நிகழ்கிறதென்று புரியவில்லை! அவன் இந்த கிணற்றிலிருந்து தண்ணீர் பருகுபவர் யாராயிருந் தாலும் அவர்கள் பைத்தியமாகி விடுவர் என்று கூறிவிட்டு மறைந்துவிட்டான்.

தண்ணீர் குடிக்க வேறு வழியில்லை, அரண்மனைக்கு போக முடியாது. எனவே தாங்கள் பைத்தியமாகி விடுவோம் என தெரிந்தபோதிலும் மக்கள் வேறு வழியில்லாமல் இந்த தண்ணீரையே குடித்தனர். சூரியன் மறையும்போது அந்த தண்ணீரைக் குடித்த வயது முதிர்ந்த கிழவனி லிருந்து சிறு குழந்தை வரை அனைவருக்கும் பைத்தியம் பிடித்துவிட்டது. ராஜா, ராணி, இளவரசன், மந்திரி ஆகியோரைத் தவிர தலைநகர் முழுமைக்கும் பைத்தியம் பிடித்துவிட்டது.

யாருக்கும் சுயநினைவில்லை! ஏனெனில் எல்லோரும் பைத்தியமாக இருக்கும்போது யாருக்கு சுய உணர்விருக்கும்? ஹிப்பிகள் சொல்வது போல ஒவ்வொருவரும் தாங்கள் விரும்பியதை செய்தனர். மக்கள் அம்மணமாக திரிந்தனர், கத்தி கதறி கூக்குரலிட்டனர், பெண்கள் நிர்வாணமாக தெருவில் ஓடினர்! ஒருவர் தலைகீழாக நின்றார், மற்றொருவர் யோகாசனம் செய்தார், எல்லோரும் கொண்டாடிக் கொண்டி ருந்தனர்! என்ன செய்வது? நகர் முழுவதும் பைத்தியமாகிவிட்டனர். எல்லோரும் பைத்தியமா கிவிட்டதால் எடுத்துச் சொல்ல யாருமே அங்கு இல்லையே!

மந்திரியும் அரச குடும்பத்தினரும் மட்டுமே சோகமாக இருந்தனர். எல்லோரும் பைத்தியமாகி விட்டனரே என்று வருத்தப்பட்டுக் கொண்டி ருந்தனர். உண்மையில் தங்களது உணர்வைப் பற்றி அவர்களுக்கே சந்தேகமாக இருந்தது. நாம்தான் பைத்தியமாகிவிட்டோமோ என்று சந்தேகப்பட ஆரம்பித்துவிட்டனர். அப்போது அங்கு ஒரு வித்தியாசமான விஷயம் நடந்தது.

நகர் முழுவதும் அரசரும் மந்திரியும் வித்தியா சமாக இருப்பதை உணர்ந்தது. அரசரும் மந்திரியும் பைத்தியமாகிவிட்டனர் என்ற வதந்தி பரவியது. கூட்டம் முழுமையும் அரண்மனை முன் ஒன்று கூடி அரசன் பைத்தியமாகிவிட்டான் என சத்தமிட ஆரம்பித்தனர். எல்லோருக்கும் பைத்தியம் பிடித்திருந்தது. எனவே அரசர் நம்மைப் போல இல்லை எனும் விஷயத்தில் எல்லோரும் ஒன்றுபட்டனர்.

காவலாளிகள், போலீஸ், படைபட்டாளம் ஆகிய அனைத்தும் பைத்தியமாகிவிட்டனர்! அதனால் அங்கு எந்த பாதுகாப்பும் இல்லை. அவர்களும் சேர்ந்து கூடி கூத்தாடிக் கொண்டு,“மரியாதையாக இயல்பாகி விடு, இல்லையேல் அரண்மனையை விட்டு வெளியே வா! நாங்கள் எங்களைப் போல வே இருக்கும் ஒருவரை புதிய அரசராக தேர்ந் தெடுத்துக் கொள்கிறோம்,” என கூக்குரலிட்டனர்.

அரசர், மந்திரியிடம்,“நமது படைகளுக்கும் கூட பைத்தியம் பிடித்து விட்டதே! என்ன செய்வது? நமக்கு பாதுகாப்பில்லையே!” என்று கேட்டார். மந்திரி விவேகமுள்ளவர், வயது முதிர்ந்த அனுபவசாலி. அவர்,“ஒரே ஒரு வழிதான் உள்ளது! முன்வாசலை அடைத்துவிட்டு பின்வாசல் வழியே தப்பி சென்று அவர்கள் தண்ணீர் பருகிய அந்த கிணற்றிலிருந்தே தண்ணீர் எடுத்து குடித்து நாமும் பைத்தியமாகி விட வேண்டியதுதான். இல்லாவிடில் இந்த பைத்தியகார கும்பல் நம்மை கொன்று விடும்.” என்றார்.

அந்த அறிவுரை மிகவும் சரியானது. அரசரும் மந்திரியும் அரச குடும்பத்தினரும் பின்வாசல் வழியே ஓடினர். அந்த மந்திரவாதி ரசாயன மாற்றம் செய்திருந்த அந்த கிணற்று தண்ணீரைக் குடித்தனர். பின் அவர்கள் பின்வாசல் வழியே வரவில்லை, ஆடிக் கொண்டும், கத்திக் கொண்டும், குதித்துக் கூத்தாடிக் கொண்டும், முன் வாசல் வழியே வந்தனர். தங்களது அரசரும் மந்திரியும் இயல்பாகி விட்டதைக் கண்ட கூட்டம் மிகவும் மகிழ்ச்சியடைந்தது.

அன்று இரவு தலை நகரம்,'அரசரும் அரச குடும்பத்தினரும் மந்திரியும் இயல்பு நிலையடைந்து விட்டனர் ' என்று மிகவும் கோலாகலமாக இருந்தது.

(கலீல் கிப்ரானின் கதைகளில் ,இருந்து)

**செ.செல்வகுமார்**
(ராட்டிங்கன் - யேர்மனி)







# மன அழுத்தமா?

மன அழுத்தமானது மூளையின் ஆற்றலைக் குறையச் செய்து அல்லது பழுதடையச்செய்து அதனால் சிந்திக்கவோ, செயப்படவோ முடியாமல் செய்துவிடுகிறது. டல்லாக இருக்கும் ஒருவரைப் பார்த்து கேட்டாலே மனசு சரியில்லை என்றுதான் கூறுவார்கள். மனதிற்கும் அழகிற்கும் அத்தனை தொடர்புள்ளது. மனது நன்றாக இருந்தாலே முகத்தில் வசீகரம் தோன்றும் புன்னகை தவழும், அழகும் ஆரோக்கியமும் அதிகரிக்கும். எனவே மன அழுத்தம் ஏற்படாமல் தவிர்க்க நன்றாக குளிக்க வேண்டும் என்கின்றனர் உளவியலாளர்கள். உடலும் மனமும் ஆரோக்கியமாக இருக்க அதுவே வழி என்கின்றனர்.

எண்ணெய் மசாஜ்

'சனி நீராடு' என்று நம் முன்னோர்கள் சொல்லிவைத்துள்ளனர். அதன் காரணம் சனிக்கிழமை மட்டுமே குளிப்பது இல்லை. வாரம் ஒருநாள் உடல் முழுக்க எண்ணெய் தேய்த்து நன்றாக குளிர, குளிர குளிக்க வேண்டும் என்பதுதான். இதனால் உடலில் உள்ள சூடு குறையும், உடலும் மனமும் குளிர்ச்சியடையும்.
எண்ணெய் தேய்த்து குளிப்பதன் மூலம் உடம்பில் சேரும் விஷத்தன்மை நீங்கும் என்று ஆயுர்வேதத்தில் கூறப்பட்டுள்ளது.

ஒவ்வொருவரின் உடல் வாகிற்கு தகுந்தவாறு அதற்கேற்ப எண்ணெய்களை தேய்த்து குளிக்க வேண்டும். தினமும் லேசாக எண்ணெய் தேய்த்து குளிப்பது நன்மை தரும் என்கின்றனர் மருத்துவர்கள். இதனால் சருமநோய்கள் மறையும், உடல் மெருகு கூடும். புத்துணர்ச்சி ஏற்படுவதோடு, உடலுக்கு ஆரோக்கியம் கிடைக்கும்.

இயற்கை மூலிகைகள்

குளிப்பதற்கு பயன்படுத்தப்படும் சோப்பு, ரசாயன கலப்பு கொண்டது. அதுபோல தலைக்கு தேய்க்கப் பயன்படுத்தப்படும் ஷாம்புவும் எண்ணற்ற ரசாயனங்களை கொண்டுள்ளது. அதற்குப் பதிலாக தேன், பால் கற்றாழைச் சாறு கலந்த கலவையை உடலில் தேய்த்துக்கு குளிக்கலாம்.

இது உடம்பில் உள்ள அழுக்கை நீக்குவதோடு அழகும், புத்துணர்ச்சியும் தரும். இந்தக் கலவையை பயன்படுத்த முடியாதவர்கள், சிறுபயறு, கடலைமாவு, தேன் கலந்து குளித்தால் சருமம் மெருகேரும். இதனால் மனஅழுத்தம் குறையும் என்கின்றனர் உளவியலாளர்கள்.
பொடுகு நீக்குங்கள்

மன அழுத்தம் தலையையும், தலைமுடியையும், அதிகம் பாதிக்கும். பொடுகு தோன்றி தலை அரிப்பு எடுக்க தொடங்கிவிடும். இதற்கு காரணம் மன அழுத்தமே என்கின்றனர் மருத்துவர்கள். எனவே நாம் தினமும் குளிப்பதைப்போலவே நாம் பயன்படுத்தும், சீப்பு, டவல் போன்றவற்றையும் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும் என்கின்றனர் மருத்துவர்கள். வாரம் ஒருமுறையாவது சுடுநீரில் போட்டு அவற்றை அலசவேண்டும். இதனால் பொடுகு ஏற்பட வாய்ப்பில்லை என்கின்றனர் மருத்துவர்கள்.

சத்தானதா சாப்பிடுங்கள்.
மனச்சிக்கலால் மலச்சிக்கல் ஏற்படும். இதுவும் ஆரோக்கியம், அழகு குறைவுக்கு காரணமாகும். எனவே நார்ச்சத்து நிறைந்த காய்கறிகளையும், கீரைகள், பழங்களையும் உட்கொள்ள வேண்டும். புடலங்காய், பீர்க்கங்காய், போன்ற காய்கறிகள் அதிக நார்ச்சத்து மிக்கவையாகும். இதனால் உடல் வனப்பு கூடுவதோடு, சருமம் பளபளப்பாகும்.





உங்கள் அனைத்துக் காப்புறுதிகளுக்கும் அதிக பணம் செலுத்துவதாக உணர்கின்றீர்களா? அது ஏன் என்று தெரியாமல் நினைக்கின்றீர்களா?
கவலையே வேண்டாம்! உங்களுக்கு உகந்த காப்புறுதி எதுவென்று தெரிந்து அதை நான் உரிய முறையில் செய்துதரக் காத்திருக்கின்றேன். உங்கள் மொழியே எனக்கும் தாய்மொழி என்பதால் உங்கள் தேவைகளை இலகுவாகப் புரிந்துகொண்டு உதவிட முன்வருகின்றேன்.

என்றும் உங்களுடன் நாங்கள்....



Thuvaragan Nesapalan

Telefon: 0202/5270-250
Mobil: 0171/6412008
www.rmb3.de
Düsseldorfer Str. 128
42115 Wuppertal

rmb³
VERSICHERUNGSKONZEPTE
FINANZDIENSTLEISTUNGEN

rmb³ ist Partner der
Gothaer

7ம் பக்கத் தொடர்ச்சி....

## முதலிரவு...

சரி என்னைப் பத்தியே கேட்டுக்கிட்டிருக்கியே, உன்னைப்பத்தி ஏதாச்சும் சொல்லு." நான் கேட்க,
"என்னைப் பத்தி சொல்றதுன்னா, உங்களமாதிரித்தான் எனக்கும் தண்ணியடிக்கிற, தம்மடிக்கிற கெட்ட பழக்கம் கிடையாது. இன்ஃபேக்சுவேஷன், உங்களமாதிரி தூயதமிழ்ல சொல்லணும்னா இனக்கவர்ச்சி இருந்த துண்டு, அதுவும் உங்கள மாதிரிதான், ஆனா எனக்கு தாழ்வு மனப்பான்மை கிடையாது. மற்றபடிக்கு நிறைய கோவில் குளமுன்னு ஊர் சுத்துவேன், நிறைய கதையடிப்பேன், புஸ்தகம் படிப்பேன். எனக்குன்னு தனியா கொள்கை எதுவும் கிடையாது அதேமாதிரி கொள்கையைப் பிடிச்சுக்கிட்டு தொங்கமாட்டேன். எனக்காகத்தான் கொள்கை, கொள்கைக்காக நான் கிடையாது. இன்னிக்கு நீளமான தலைமுடியோட இருக்கிறது பிடிக்குதுங்கறதுக்காக வைச்சிருக்கேன், நாளைக்கே தலைவலிக்கிற மாதிரி இருந்ததுன்னா பாப் அடிச்சிட்டு வந்து நிப்பேன்..." அவள் சொல்லிவிட்டு என்னையே பார்த்தாள். நான் இதற்கு பதில் என்ன சொல்றதுன்னு தெரியாம யோசித்துக் கொண்டிருந்தேன்.

"இதுக்கு நீங்க பதில் சொல்லணும் அப்பத்தான், உங்களைப்பத்தி நான் புரிஞ்சிக்க முடியும்." அவள் கேட்டும் நான் யோசித்துக்கொண்டிருந்ததால் தொடர்ந் தவள், "நிச்சயம் ஆன நாள்ளேர்ந்து காத்துக் கிட்டிருந்தேன். நீங்க பேசலை... பேசாததால், காதல் தோல்வி போலிருக்கு, நம்ம தலையில கட்டிவைக்கிறாங் கன்னுதான் நினைச்சேன்.

"இங்கப்பாரு நீ இப்படி வெளிப்படையா பேசுறது ரொம்ப பிடிச்சிருக்கு. எனக்கு நீ பண்ணவேண்டிய தெல்லாம் ஒன்னே ஒன்னுதான்."

அவள் முக்கியமாக கவனிக்கவேண்டிய ஒன்று என்பதால் கவனிக்கிறாளா என்று பார்த்துக்கொண்டேன்.
"எங்கம்மா பத்தி நான் சொல்லணும், நான் இன்னிக்கு இந்த நிலைமையில் இருக்கேன்னா அதுக்கு ஒரே காரணம் அம்மாதான் அடுத்தநாள் உயிரோட இருப்பனான்னே தெரியாத நாட்கள் என்னோட வாழ்கையிலே இருந்திருக்கு, அதிலேர்ந்தெல்லாம் மீண்டு நானும் எங்க குடும்பமும் வந்திருக்குன்னா அதுக்கு ஒரேயொரு காரணம் அம்மாதான். அதனால அம்மாவை மட்டும் நீ அனுசரிச்சுப் போகணும். அதுமட்டும்தான் நான் உன்கிட்ட கேக்குறது, எனக்கும் இந்த பெண்சுதந்திரம் அப்பிடிங்கிற விஷயத்தில் எல்லாம் நம்பிக்கையுண்டு."
நான் சொல்லிமுடித்ததும் பலமாகச் சிரித்தாள்.

"நான் நினைச்சேன், நீங்க சரியான அம்மா புள்ளையாத்தான் இருப்பீங்கன்னு சரியாத்தான் இருக்கு. இங்கப் பாருங்க எனக்கும் ஒரு அண்ணன் உண்டு அவனுக்கு கல்யாணம் ஆகி அண்ணி எங்க வீட்டிலையும் இருக்காங்க. அதனால நீங்க பயப்படாதீங்க் நிறைய கதை கட்டுரையெல்லாம் படிச்சு பயந்து போயிருக்கிறீங்கன்னு நினைக்கிறேன். பயப்படா தீங்க உங்கம்மாவை நான் கடிச்சி தின்னுடமாட்டேன். பிரச்சனையே வராதுன்னு சொல்லமாட்டேன், வந்தாலும் நம்ம இரண்டு பேரும் சேர்ந்து சரி பண்ணிடலாம்.

எனக்கு இந்த விவாகரத்து பண்றதுல எல்லாம் நம்பிக்கையே கிடையாது, இனிமே எனக்கு நீங்கதான், நீங்க மட்டும்தான். அதேமாதிரிதான் உங்களுக்கும் நான் மட்டும்தான், உங்கம்மா சொன்னாங்கறதுக்காக எல்லாம் மணியம் செல்வம் ஓவியம் மாதிரியிருக்குறா இல்லை அஜந்தா ஓவியம் மாதிரியிருக்குறான்னு சொல்லிக்கிட்டு வேறபொண்ணை சைட் அடிக்கலாம்னு நினைச்சீங்க அவ்வளவுதான் சொல்லிட்டேன், பின்னிடுவேன்.
நான் யோசித்துக்கொண்டிருக்க, "என்ன பலத்த யோசனை?"
"இல்லை, கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி, நல்ல பொண்ணா, கொஞ்சம் எழுந்திருச்சி நிக்கிறீங்களா அப்பிடின்னு கேட்ட பொண்ணா இதுன்னு யோசிச்சேன்." சொல்லிவிட்டு சிரித்தேன்.
"கால்ல விழுறதப் பத்தி கேக்குறீங்கன்னா, இப்பவும் கேக்குறேன் எந்திரிச்சு நில்லுங்கோ நமஸ்காரம் பண்ணிக்கிறேன். எங்கள் வீட்டில் நல்லநாள் பெரியநாள்னா பெரியவங்க காலில் விழுவது சம்பிரதாயம் தான், நானும் ஏன் என் அண்ணனுமே இன்னமும் எங்க மாமா, அத்தை காலில் விழுந்து ஆசிர்வாதம் வாங்குவது உண்டு, அதனால் புருஷனான உங்கள் காலில் விழுவதிலும் எனக்கு பிரச்சனை கிடையாது. இல்லை நான் அதிகமா பேசுறேன்னு நினைச்சீங்கன்னா, எனக்கு என்ன சொல்றதுன்னு தெரியலை, பழக்கதோஷம்னு வைச்சுக் கோங்கோ."

முகம் லேசாக வாடத் தொடங்கியிருந்தது. நான் அவள் பக்கத்தில் நெருங்கி உட்கார்ந்து கொண்டு, "இல்லம்மா, நான் வேடிக்கையாத்தான் சொன்னேன், நீ உங்கவீட்டில் எப்படி இருப்பியோ அப்படியே இங்கையும் இருக்கலாம். அப்புறம் ஒரு முக்கியமான விஷயம் குழந்தைகளைப் பற்றி நீ எதாச்சும் யோசிச்சு வைச்சிருக்கியா, வேலைக்கு போறாப்புல எதுவும் ஐடியா இருக்கா?"

"எனக்குத் தெரிஞ்ச டாக்டர் ஒருத்தங்க கல்யாணத்துக்கு வந்திருந்தாங்க் அவங்க சொன்னாங்க, நம்ம இரண்டுபேருக்கும் குழந்தை பெத்துக்குறதுக்கு இதுதான் நல்ல வயசாம். அதனால தள்ளிப்போடாம பெத்துக்கச் சொன்னாங்க. எங்கம்மாவும் இதைத்தான் சொன்னாங்க் மற்றபடிக்கு நீங்க வேற ஏதாச்சும் யோசிச்சு வைச்சிருந்தா சொல்லுங்க, அதேமாதிரி வேலைக்கு போறாப்புல ஐடியாயெல்லாம் கிடையாது, லட்சியமே அதுதான், நீங்கத்தான் பெரிய கம்பெனியில வேலை பார்க்குறீங்கல்ல. வாங்கிக் கொடுங்க." சொல்லிவிட்டு நக்கலாய்ச் சிரித்தாள்.

"எனக்கும் நாம் சீக்கிரமா குழந்தை பெத்துக்குறதுதான் நல்லதா படுது, உன் வேலையைப் பத்தி கவலைப் படாதே, உனக்கு ஆர்வமிருந்தா போதும், படிப்பு முடிந்தவுடன் வாங்கிரலாம். வேற ஏதாச்சும் கேக்கணும்னா கேளு, இல்லைன்னா ஒரே ஒரு வேண்டுகோள், எனக்கு கொஞ்சம் மின்னஞ்சல் எல்லாம் பாக்க வேண்டியிருக்கு, பத்து நிமிஷம் கொடுததேன்னா பார்த்திடுவேன்." கெஞ்சலாய்ப் பார்த்தேன்.
"அப்பவே சொன்னேன்ல பார்த்துக்கோங்கன்னு, ஆனா ஒன்னு உங்க அம்மா சொன்னாங்க லேப்டாப் உங்க முதல் பொண்டாட்டி மாதிரின்னு அப்பிடியிருக்காதுன்னு நினைக்கிறேன். அப்பிடித்தான்னா உங்க லாப்டாப்புக்கு நேரம் சரியாயில்லைன்னு அர்த்தம், உங்களை நீங்களே மாத்திக்கோங்க." சொல்லி விட்டு மீண்டும் நக்கலாய்ச் சிரித்தாள்.
"அம்மா தாயே லாப்டாப்பை ஒன்னும் பண்ணீராதம்மா, இனிமே இந்த ரூமிற்குள்ளேயே எடுத்துட்டு வரமாட்டேன். இன்னிக்கு ஒருநாள் மன்னிச்சிரு." இரண்டு கைகளையும் கூப்பி நானும் நக்கலடித்தேன்.
"சரி சரி பொழச்சுப்போங்க, முதல் நாள்னு மன்னிக் கிறேன், நான் இந்த புடவையை கழட்டிவைச்சிட்டு நைட்டி போட்டுட்டு வருவேன் அதுக்குள்ள பாத்து முடிச்சிருக்கணும். என்ன புரியுதா?"
புரிஞ்சது அவள் பேச்சு மட்டுமல்ல அவள் வேகமும்தான். அவள் கேட்டுவிட்டு அங்கிருந்த குளியலறைக்குள் நுழைந்தாள்.


# ஐரோப்பாவில் புகழ்பெற்ற மொத்த வியாபார ஸ்தாபனம்!




## வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் 2012 ஆண்டில் சிறப்பான பரிசுகள்!

**இந்த மாபெரும் பரிசுத்திட்டம்**
**தை 1ஆம் திகதி முதல் தை 31ஆம் திகதி வரை மட்டுமே!**

நீங்கள் எம்மிடம் 750 யூரோவிற்கு மேல் கொள்வனவு செய்தால் உங்களுக்கு பகுதி **A** இல் உள்ள பொருட்களில் ஏதாவது ஒன்றினைப் பரிசாகப் பெறலாம்.

நீங்கள் எம்மிடம் 1250 யூரோவிற்கு மேல் கொள்வனவு செய்தால் உங்களுக்கு பகுதி **B** இல் உள்ள பொருட்களில் ஏதாவது ஒன்றினைப் பரிசாகப் பெறலாம்.

நீங்கள் எம்மிடம் 1750 யூரோவிற்கு மேல் கொள்வனவு செய்தால் உங்களுக்கு பகுதி **C** இல் உள்ள பொருட்களில் ஏதாவது ஒன்றினைப் பரிசாகப் பெறலாம்.

**பரிசுக்கான விதிமுறைகள்!**

ஒரு பரிசுப் பொருளை முதலில் தெரிவு செய்தால் பின்பு அதனை மாற்ற முடியாது.

நீங்கள் ஒரு ஓடருக்கு பல பொருட்களைத் தெரிவு செய்ய முடியாது. ஒரு ஓடருக்கு ஒரு பொருளையே தெரிவு செய்யலாம்.

பரிசுப்பொருட்களைப் பெறும் தகுதி ஓடர்களுக்கு முழுமையாகப் பணம் செலுத்தியவர்களுக்கு மட்டுமே உண்டு!
எங்களுக்கு கிடைத்த பரிசுப் பொருட்கள் பாதிப்புக் குரியனவாக இருப்பின் 24 மணித்தியாலத்திற்குள் எமக்கு முறையீடு செய்தல் வேண்டும்.
பரிசுப் பொருட்கள் பணமாகத் தரப்படமாட்டாது.
நீங்கள் உங்கள் கொள்வனவுக்கான தொகைக்குரிய பரிசினைப் பெற்று இருந்தால், நீங்கள் ஓடர் செய்த பொருட்களை மாற்றுவதன் மூலமோ அல்லது வேறு காரணங்களுக்காகவோ உங்கள் கொள்வனவுத் தொகையை மாற்ற முடியாது.

Our Contact Details:
Asijah-Europe
De Steven 12
9206 AX Drachten
Netherlands
Tel: +31 512 54 18 31
+31 512 53 91 44
Fax:+31 512 54 38 66
Email: info@asijah.com




Hotmail: asijaheurope@hotmail.com


அனைவருக்கும் எமது இனிய தைப்பொங்கல் நல் வாழ்த்துக்கள்

# கணிதப் பிரிவில் தேசிய ரீதியில் முதலிடம் பெற்று யாழ்.மாணவன் சாதனை!



கமலக்கண்ணன் கமலவாசன்

## கல்வி ஒன்றுதான் இன்று தமிழனின் தற்பாதுகாப்பு ஆயுதம்!

எத்தனை துயரங்கள் எத்தனை கொடுமைகள் அத்தனைக்கும் இடையில் கல்வியில் சாதனை படைக்கும் நம் உடன் பிறப்புக்களின் திறமைக்கு ஒவ்வொரு தமிழனும் தலைசாயத்து நன்றியும் பாராட்டும் தெரிவிக்க வேண்டும். தற்போது வெளியாகியிருக்கும் உயர்தரப் பரீட்சை முடிவுகளில் உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி மாணவன் கணிதப்பிரிவில் தேசியரீதியில் முதலிடம் பெற்று சாதனை படைத்துள்ளார்.

கிடைத்த தகவல்களில் அடிப்படையில் உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரியைச் சேர்ந்த கமலக்கண்ணன் கமலவாசன் என்ற மாணவன் 3 'ஏ' (3.1167 இஸற் புள்ளிகள்) சித்திகளைப் பெற்று, கணிதப்பிரிவில் அகில இலங்கை ரீதியில் முதலிடம் பெற்றுள்ளார்.

கல்வி ஒன்றுதான் இன்று தமிழனின் தற்பாதுகாப்பு ஆயுதம். இதனை உணர்ந்து அதற்கு உதவ முன்வரவேண்டும். நீங்கள் எவ்வளவு புண்ணியம் செய்தாலும் , ஒரு ஏழைக்கு கல்வியறிவு கொடுக்க நீங்கள் உதவும் புண்ணியத்துக்கு மேல் ஒரு புண்ணியம் இல்லை, அதற்கு மேல் ஒரு தவமும் இல்லை. இன்று கல்விக்காக ஏங்கும் எத்தனையோ நம் மாணவர்களை இனங்கண்டு உதவுவோமாக. தமிழனின் தற்பாதுகாப்பு ஆயுதமாக கல்வியை வளர்ப்பது வன்முறையோ! பயங்கரவாதச் செயலோ அல்ல!.



### யாழ்ப்பாணத்தில் வெற்றிமணியின் 19 வது வெளியீடான

## சிறுவர் சிந்தனைக் கவிதைகள் வெளியீடு

குரும்பசிட்டி மீள் எழுச்சியின் நம்பிக்கை நட்சத்திரம் அமரர் ஆ.சி.நடராஜா அவர்கள் எழுதிய சிறுவர் சிந்தனைக் கவிதைகள் நூல் வெளியீடு கடந்த 21.12.2011. புதன்கிழமை உரும்பிராய் காளிகோவில் மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

குடாநாட்டில் உள்ள பாடசாலைகள் யாவற்றிற்கும் இலவசமாக இந்நூல் வழங்கப்படுகின்றது. இந்த அரிய நூலினை வெற்றிமணி பத்திரிகை தனது 19 வது வெளியீடாக வெளியிட்டுள்ளது.

புத்தகத்துடன் குழந்தைகள் பாடல்களை இலகுவாகப் பாடிப் பழக வசதியாக ஒலிப்பேழையும் இணைக்கப்பட்டுள்ளது.

விழாவில் திருமதி அருளேஸ்வரி வேதநாயகம் (முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளர்) மற்றும் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் தேவஸ்தானத்தின் தலைவர் செஞ்சொற்செல்வர்.ஆறு.திருமுருகன். உரும்பிராய் இந்துக்கல்லூரி அதிபர்.அ.பஞ்சலிங்கம் முன்னாள் வடமாகாணக் கல்விப்பணிப்பாளர் திவகலாலா, கொ க்குவில் இந்துக்கல்லூரி முன்னாள் அதிபர். பொன். கமலநாதன் மற்றும் குரும்பசிட்டி மக்களும் யாழ். தினக்குரல் நிர்வாகிகளும் கலந்து சிறப்பித்தனர். படத்தில் சிறப்பு பிரதிகளை யாழ் வெற்றிமணி இணையாசிரியர் திருமதி வலன்ரீனா இளங்கோவன் மற்றும் மக்கள் தொடர்பாளர் திரு.இளங்கோவன் வழங்குவதைக்காணலாம். தகவல்: யாழ்.வெற்றிமணி



குரும்பசிட்டி மீள் எழுச்சியின் நம்பிக்கை நட்சத்திரம், மானிட நேயர் அமரர் ஆ.சி.நடராஜா அவர்களுக்கு கடந்த 03.12.2011 அன்று யேர்மனியில் டோட்மூண்ட் நகரில் தமிழர் கலையகத்தில் ஓர் அஞ்சலி நிகழ்வு இடம் பெற்றது. இந்நிகழ்வினை குரும்பசிட்டி மக்கள் மற்றும் வெற்றிமணி பத்திரிகை, சிவத்மிழ் சஞ்சிகையும் இணைந்து ஏற்பாடு செய்திருந்தது. நிகழ்வில் இருந்து சில காட்சிகள்.படங்கள். Tharan Video & Foto.


1.இயல் தமிழ் போட்டி: (கவிதை,கட்டுரை)
பொறுப்பாளர்: திரு.கதிர். 015 12 94 51 622
2.இசைத்தமிழ் போட்டி:(சங்கீதம்,வீணை, வயலின்,மிருதங்கம்)
பொறுப்பாளர்: திரு.ரூபன். 015 77 13 38 464
1.நாடகத்தமிழ்: (நாடகம்,தாளலயம்,கூத்து)
பொறுப்பாளர்: திரு.இரவீந்திரன்: 017 17 315 015

முத்தமிழ் யேர்மனி 2012

email:muththamil-germany2012@hotmail.de
போட்டிக்கான விண்ணப்பப் படிவத்தை 15.02.2012 முன் அனுப்பி வைக்கவும்
Vettimani-Add


### நன்றி நவிலல்

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காகவும் குரும்பசிட்டியின் நம்பிக்கை நட்சத்திர மாகவும் இருந்த ஆ. சி. நடராஜா அவர் களின் மரணச் செய்தி அறிந்து புலம்பெயர் நாடுகளில் இருந்து தொலை பேசி மூலம் தொடர்பு கொண்டு ஆறுதல் தந்த அன்பு உள்ளங்களுக்கு எங்கள் குடும்பத்தின் சார்பில் நன்றியை தெரி வித்துக் கொள்கிறோம்.

மனைவி பிள்ளைகள்,சகோதரர்கள், மருமக்கள்- பேரப்பிள்ளைகள்

தகவல்:
தந்கராசா கடம்பேஸ்வரி-
Buschhausener Str. 32-46049
Oberhausen
**0208 / 2996942**


**T.T.S Brothers** Asien Supermarkt

உங்கள் உறவுகளுக்கு
துரிதமாகப் பணம் அனுப்ப நாடுங்கள்!
0.01€ இருந்து 500€ வரை அனுப்ப 8.90 € மட்டுமே!
500€ இருந்து 1.500€ வரை அனுப்ப 15.00€ மட்டுமே!
MoneyGram Transfert d'argent

இலங்கை, இந்திய மளிகைப்பொருட்கள், மற்றும் கடல் உணவு வகைகள் அனைத்திற்கும் நாடுங்கள்.
மங்கையர் விரும்பும் அசல் 22 கரட் தங்கநகைகள் நவீன டிசைன்களில் அழகுறத் தருபவர்கள்
TEL: 0231-819288 Fax: 0231-833431
RHEINISCHE STR 52
44137 DORTMUND

Helmholtz Str.11
46045 Oberhausen
Tel:0208 202829
Garten Str.29
48147 Münster
Tel: 0251 2301184




# யேர்மனியில் கற்ற கல்லூரியிலேயே ஆசிரியராக பதவியேற்கும் ஈழத் தமிழர்!

டோர்ட்முன்ட் Abendgymnasium என்ற மாலைக்கல்லூரியில் யோர்ச் டயஸ் என்ற தமிழர் உயிரியல் ஆசிரியராக நியமனம் பெற்றுள்ளார். அக்கல்லூரி Fachabitur அல்லது Abitur (க.பொ.த உயர் தரத்துக்குக்குச் சமனான கல்வி) பாடசாலை.

யோர்ச் டயஸ் பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், காட்லிக்கல்லூரியின் பழைய மாணவருமாவார். இவர் 1985 ம் ஆண்டு யேர்மனியை வந்தடைந்து பல சிரமங்களுக்கும் மத்தியில் யேர்மன் மொழியைக் கற்று, மாலைக்கல்லூரியில் தனது க.பொ.த படிப்பைப் பூர்த்திசெய்தார். அதன்பின் போகும் (Bochum) பல்கலைக்கழகத்தில் உயிரியல்துறையில் முதுமானிப்பட்டத்தை (M.Sc.) 2003ம் ஆண்டு பெற்றுக்கொண்டார். பின்னர் எசன் (Essen) நகரத்தின் FOM என்ற பல்கலைக்கழகத்தில் வியாபாரநிர்வாகத்துறையில் MBA (Master of Business Administration) என்ற முதுமானிப் பட்டத்தையும் பெற்றுக்கொண்டார்.

கடந்த ஆவணிமாதத்தில் மேற்குறிப்பிட்ட கல்லூரியில் உயிரியல் ஆசிரியராக நியமிக்கப்பட்டார். 31.08.2011 அன்று இவருக்கான ஆசிரியர்சான்றிதழை அரசாங்க அதிபர் கலாநிதி திரு பொலர்மன் (Regierungspräsident Dr. Bollermann) வழங்கிப் பாராட்டினார். ஈழத்தில் போரினால் தனது கல்வி சிதைந்த போதினும், குடும்பப்பொறுப்புக்கு மத்தியிலும், விடாமுயற்சியாலும், மன உறுதியுடன் ஓய்வுநேரத்தில் படித்து பட்டப்படிப்புகளை முடித்து தான் படித்த அதே கல்லூரியில் ஆசிரியரானதைப் பல பத்திரிகைகள் பாராட்டின. WDR தொலைக்காட்சியும் பாராட்டி பாடசாலையிலிருந்து நேர் ஒளிபரப்புச் செய்தார்கள். இவர் ஆற்றல் மென்மேலும் பெருக வெற்றிமணி வாழ்த்துகின்றது.





திரு.யோர்ச் டயஸ்


**25 வருடங்களாக யேர்மனியில் வெற்றி நடைபோடும் எமது வியாபார ஸ்தாபனம் இன்று டோட்மூண்ட் நகரில்**



**5வது ஆண்டில் கால் பதிக்கின்றது!**

**1500 வது நாள்.....**

**Gopara Gnanam**







18.01.2012 எமது 5ம் வருட ஆரம்பத்தை முன்னிட்டு உங்கள் ஆதரவிற்கு தலைசாய்த்து நன்றி தெரிவிக்கின்றோம்!
இது வரை தந்த உங்கள் ஆதரவிற்கு எமது நன்றியாக அனைத்துப் பொருட்களும்

**அதிரடி மலிவு விற்பனை!**

1.12.2011. முதல் 18.01.2012 வரை

**கொள் முதல் விலையில் அனைத்துப் பொருட்களும்.**

ஒன்று வாங்கினால் **ஒன்று இலவசம்!**
இரண்டு வாங்கினால் **ஒன்று இலவசம்!**
(பலசரக்குப் பொருட்கள் மட்டும்!)
(எம்மிடம் கையிருப்பு உள்ள வரை மட்டுமே)
கிறைண்டர் சில்வர் பாத்திரங்கள்,
அனைத்தும் **20 வீதம் கழிவு** விலையில்.
**100 யுரோவிற்கு 10 முதல் 21 வகையான ஜவுளிகளை அள்ளிச் செல்லலாம்.**

50 யூரேவிற்கு மெல் பொருட்கள் வாங்குபவர்கள் பற்றுச் சீட்டுடன் பெயர் தொலைபேசி இலக்கம், விலாசம் என்பதனை எழுதி எமது ஸ்தாபனத்தில் வைத்துள் அதிஸ்டலாபப் பெட்டிக்குள் போடவும்.

உங்களில் யார் அதிஸ்ட சாலி என்பதனை **21.01.2012** மாலை, 5.00 மணிக்கு எமது ஸ்தபனத்தில் அதிஸ்டம் பார்க்கப்படும்.**முதலாவது பரிசு: வர்ணத் தொலைக் காட்சிப் பெட்டி** (TV) **இன்னும் 5 ஆறுதல் பரிசுகளும் உண்டு.**




**பொங்கல் பானை 9.99€ மட்டுமே!**




கால் அடுப்பு 29.99 €

Rheinische Str.81
44137 Dortmund
Germany

**Tel: 0231/5450028**
**Mob: 01713306542**

# சனிப் பெயர்ச்சி

21.12.2011 - முதல் -16.12.2014 - வரை

## மேஷம்:1

தொழிலில் விசேடமான வளர்ச்சியைக் காணலாம். வேலையில்லாதவர்களுக்குத் தகுந்ததொரு வாய்ப்புக் கூடிவரும். சரராசிக்கு அதிபதியான சனி மற்றொரு சர ராசியில் உலவுவதால் வெளிநாட்டுத் தொடர்புடன் செய்யும் தொழிலில் விசேடமான ஆதாயம் கிடைக்கும். சனி காற்று ராசியில் இருப்பதால் ஆகாயம் சம்பந்தப் பட்ட இனங்களாலும் ஆதாயம் கிடைக்கும். பயணம் பயன்படும். சொத்துக்கள் சேரும். காப்பீட்டுத் தொகை, ஓய்வூதியம் மற்றும் எதிர்பாராத பொருள்வரவுக்கு இடம் உண்டு. திருமணம் ஆகாதவர்களுக்கு அதற்கான வாய்ப்புக் கூடிவரும். சனி 11-ஆம் இடமான பாதக ஸ்தானத்துக்கு உரியவராகி 7-ல் உலவுவதால் கணவன் மனைவியிடையே சலசலப்புக்கள் ஏற்படும். நண்பர்கள், உறவினர்களிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டு, பிரிந்து செல்லவும் நேரலாம். அக்கம் பக்கத்தில் உள்ளவர் களிடம் சுமுகமாகப் பழகுவதன் மூலம் அவர்களால் சங்கடங்களுக்கு ஆளாகாமல் மீளலாம். அணுகு முறையைச் சரிப்படுத்திக் கொள்வது அவசியமாகும்.

16-5-2012 முதல் 25-6-2012 வரை சனி கன்னியில் வக்கிரமாக சஞ்சரிப்பதால் பொருளாதார நிலையில் அபிவிருத்தி காணலாம். செய்தொழிலும் சீராக இருக்கும். எதிர்ப்புக்கள் குறையும். திறமைக்குரிய பயன் கிடைக்கவே செய்யும்.

26-6-2012 முதல் 4-11-2013 வரை வெளிநாட்டுத் தொடர்பால் அதிகம் நலம் உண்டாகும். போக்கு வரத்துச் சாதனங்கள், ஏற்றுமதி-இறக்குமதி ஆகிய வற்றால் ஆதாயம் கிடைக்கும். தொழில் ரீதியாக நல்ல மாற்றத்தைக் காண்பீர்கள். புதியவர்கள் அறிமுகமாகி, உங்களுக்கு நலம் புரிவார்கள். குறுக்கு வழிகளில் திடீர்ப் பொருள்வரவு உண்டாகும்.

5-11-2013 முதல் 1-11-2014 வரை புனிதப்பணிகளில் ஈடுபாடு உண்டாகும். தொலைதூரப் பயணத்தின் மூலம் பயன் பெறுவீர்கள். பொருளாதார நிலையில் அபிவிருத்தி காணலாம். மகன் அல்லது மகளின் முன்னேற்றத்துக்காகச் செலவு செய்ய வேண்டிவரும். குழந்தைகள் வெளிநாட்டில் படிக்கவோ, வேலை செய்யவோ வாய்ப்புக் கூடிவரும். மொத்தத்தில் இந்தச் சனிப் பெயர்ச்சிக்காலத்தில் தொழில் ரீதியாக முன்னேற்றம் காண்பீர்கள்.

## ரிஷபம்:2

பலன் மிக மிக விசேடமானதாகும். எதிரிகளை வெல்வீர்கள். வழக்கில் சாதகமான தீர்ப்பு கிடைக்கும். மனோபலம் கூடும். தன்னம்பிக்கை பெருகும். நோய்நொடி உபத்திரவங்கள் குறையும். வரவேண்டிய பணம் கைக்கு வந்து சேரும். தொழிலில் விசேடமான வளர்ச்சியைக் காணலாம். கடன் உபத்திரவம் நீங்கும். குடும்பத்தில் குதூகலம் உண்டாகும். பொது நலப்பணியாளர்கள், கலைஞர்கள் ஆகியோர் வெற்றி நடைபோடுவார்கள். பதவி உயர்வு, இடமாற்றம், ஊதிய உயர்வு ஆகியவை கிடைக்கும்.

15-11-2011 முதல் 10-10-2012 வரை நிலபுலங்களின் சேர்க்கையோ, அவற்றால் ஆதாயமோ கிடைக்கும். இயந்திரப்பணியாளர்கள் ஏற்றம் பெறுவார்கள். பொது நலப்பணியாளர்களுக்கு வரவேற்பு கூடும். வழக்கில் வெற்றி கிட்டும். வாழ்க்கைத்துணைவரின் நலனுக்காகச் செலவு செய்ய வேண்டிவரலாம். 16-5-2012 முதல் 25-6-2012 வரை எதிர்பாராத ஓரிரு அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் கூடிவரும். தாய் நலம் சிறக்கும். மக்களால் அனுகூலம் உண்டாகும். 26-6-2012 முதல் 4-11-2013 வரை உடல்நலம் சீராகும். வாழ்க்கை வசதிகள் கூடும். நூதனமான பொருட்களின் சேர்க்கை நிகழும்

கலைஞர்களுக்கு வெற்றி வாய்ப்புகள் கூடும். கறுப்பு நிறமுள்ளவர் உங்களுக்கு உதவுவார்.

5-11-2013 முதல் 1-11-2014 வரை எதிர்பாராத பொருள் சேர்க்கை நிகழும். நல்லவர்களது தொடர்பால் நலம் பல பெறுவீர்கள். சுப காரியங்கள் நிகழ வாய்ப்பு உண்டாகும். கூட்டுத் தொழிலில் அபிவிருத்தி காணலாம். வாழ்க்கைத்துணைவரின் மூலம் நலம் உண்டாகும். பூர்விகச் சொத்துக்கள் கிடைக்கும். மொத்தத்தில் சுபிட்சம் கூடும் காலமிது.

## மிதுனம்:3

உங்கள் ராசிக்கு 4-ல் உலவிக் கொண்டிருந்த சனி 5-ஆமிடம் மாறி இருக்கிறார். கோசாரப்படி இது சிறப்பானதாகாது. என்றாலும் சனி உங்கள் ராசிக்கு 8, 9-ஆம் இடங்களுக்கு அதிபதியாகி 5-ல் இருப்பதால் சில நன்மைகளும் உண்டாகும். 8-ஆம் வீட்டோன் 5-ல் இருப்பதால் மக்களால் மன வருத்தம் ஏற்படும். புத்திர சோகமும் உண்டாகும். பிள்ளைகளில் நடத்தை சீராக இராது. அவர்களது கல்வியில் தடை ஏற்படவும் காரணம் உண்டு. கருச்சிதைவு, வயிறு சம்பந்தப்பட்ட பிரச்னைகள் ஏற்படும். கர்ப்பிணிப் பெண்கள் விழிப்புடன் இருப்பது அவசியமாகும். கௌரவம், மதிப்பு குறையும். பூர்விகச் சொத்துக்களை இழக்க நேரலாம். 9-ஆம் வீட்டோன் சனி 5-ல் இருப்பதால் எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புக்களையும் பெறுவீர்கள். தெய்வப் பணிகள் ஈடேறும். குல தெய்வத்துக்கு ஆற்றவேண்டிய பணிகளை ஆற்றுவீர்கள். நீண்ட காலத் தேவைகள் நிறைவேறும். பொருளைச் சேமிக்கவும் செய்வீர்கள்.

15-11-2011 முதல் 10-10-2012 வரை பொருளாதார நிலை உயரும். திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புக்களையும் பெறுவீர்கள். தொழிலில் முன்னேற்றம் காணலாம்.

குடும்பத்தில் சுப காரியங்கள் நிகழும். பிரச்னைகள் குறையும். குழந்தைகளுக்கு சுப காரியங்கள் நிகழும். கடன் உபத்திரவம் குறையும். 16-5-2012 முதல் 25-6-2012 வரை உடல்நலனில் கவனம் செலுத்த வேண்டிவரும். தாயாராலும், உற்றார்-உறவினர்களாலும் பிரச்னைகள் சூழும். சொத்துக்கள் சம்பந்தப்பட்ட காரியங்களில் விழிப்புடன் ஈடுபடுவது நல்லது.

11-10-2012 முதல் 4-11-2013 வரை எதிரிகள் விலகுவார்கள்.முன்பின் அறிமுகம் இல்லாதவர்கள் கூட இப்போது உங்களுக்கு உதவுவார்கள். மக்கள் நலனில் கவனம் தேவைப்படும். வயிறு சம்பந்தப்பட்ட உபாதைகள் சிலருக்கு ஏற்படும். இடமாற்றம், நிலைமாற்றம் ஆகியவை உண்டாகும்.

5-11-2013 முதல் 1-11-2014 வரை செல்வாக்கும் மதிப்பும் உயரும். பொருள் வரவு அதிகமாகும். பெரியவர்கள், ஞானிகள், மகான்கள், சித்தர்கள் ஆகியோரது ஆசிகளையும் ஆதரவையும் பெறுவீர்கள். மக்கள் நலம் பாதிக்கும் என்றாலும் தெய்வ அருளால் சீராகிவிடும். கணவன் மனைவி உறவு நிலை திருப்தி தரும். தந்தையாலும், தந்தை வழி உறவினராலும் நலம் உண்டாகும். சொத்துக்கள் சேரும். குடும்பத்தில் சுப காரியங்கள் நிகழ வாய்ப்புக் கூடிவரும். அலைச்சலும் உழைப்பும் இந்த நேரத்தில் அதிகரிக்கும். தொழில் ரீதியாக நல்ல முன்னேற்றம் உண்டாகும். மொத்தத்தில் இந்தச் சனிப்பெயர்ச்சிக் காலத்தில் நல்லதும் அல்லாததும் கலந்தவாறு உண்டாகும்.

## கடகம்:4

சொத்துக்கள் சேரும். சுகம் கூடும். மனைவி வழியில் நலம் உண்டாகும். வாழ்க்கைத்துணைவருக்கு நல்ல வேலைவாய்ப்பு கிடைக்கும். கூட்டாளிகளால் அனுகூலம் உண்டாகும். 8-ஆம் வீட்டோன் சனி 4-ல் இருப்பதால் சுகபங்கம் ஏற்படும். சொத்துக்கள் சம்பந்தமான பிரச்னைகள், வழக்குகள் ஏற்படும். தாய் நலனில் கவனம் செலுத்த வேண்டிவரும். இருப்பிட மாற்றம் உண்டாகும். விவசாயிகளுக்கு முன்னேற்றம் பாதிக்கும். வீண் விரயங்கள் ஏற்படும். மாணவர்கள் படிப்பில் முழுமையான கவனம் செலுத்தினால்தான் முன்னேற்றம் காணமுடியும். அலட்சியப் போக்கு அடியோடு கூடாது. எதிலும் யோசித்து ஈடுபடுவது நல்லது. சனிக்கு 8-ஆம் வீட்டு ஆதிபத்தியமே வலுப்பெறுவதால் துன்பம், துயரம் ஆகியவை உண்டாகும். முக்கிய நண்பர்கள், உறவினர்களை விட்டுப் பிரிய நேரலாம். சிலர் மனதுக்குப் பிடிக்காத இடத்தில் வசிக்க வேண்டிவரும்.

15-11-2011 முதல் 10-10-2012 வரை எதிர்பாராத பொருள் வரவு உண்டாகும். மகப்பேறு அல்லது மக்களால் பாக்கியம் பெறுவீர்கள். உடன்பிறந்தவர்களின் நலம் கூடும். செய்துவரும் தொழிலில் அபிவிருத்தி காணலாம். இடமாற்றம், நிலைமாற்றம் ஆகியவை ஏற்படும். சகோதரரால் முக்கியமான ஓரிரு எண்ணங்கள் இப்போது ஈடேறும். 11-10-2012 முதல் 4-11-2013 வரை பயணத்தின் மூலம் அனுகூலம் உண்டாகும். வெளியூர், வெளிநாட்டுத் தொடர்புகள் நலம் தரும். எதிரிகள் அடங்கிப் போவார்கள். முக்கியஸ்தர்களது தொடர்பால் நலம் பெறுவீர்கள். 23-12-2012 முதல் அலைச்சல் அதிகரிக்கும். நண்பர்கள், உறவினர்களால் பிரச்னைகள் உண்டாகும். முக்கிய உறவினரையோ, நண்பரையோ பிரிய வேண்டிவரும். இடமாற்றம், நிலைமாற்றம் ஆகியவை ஏற்படும். தாய் நலனில் அக்கறை தேவை. சொத்துக்கள் சம்பந்தமான பிரச்னைகள் ஏற்படும்.

31-5-2013 முதல் சுபச் செலவுகள் கூடும். புதிய நிலம், மனை, வீடு, வாகனச் சேர்க்கை நிகழும். கடன் தொல்லை குறையத் தொடங்கும். 5-11-2013 முதல் 1-11-2014 வரை புனிதமான காரியங்களில் ஈடுபடுவீர்கள். மாணவர்கள் வளர்ச்சிகான மார்க்கத்தைக் காண்பார்கள். எதிரிகள் அடங்கிப் போவார்கள். உத்தியோகஸ்தர் களுக்குப் பதவி உயர்வு, இடமாற்றம், ஊதிய உயர்வு ஆகியவை கிடைக்கும். மொத்தத்தில் இந்தச் சனிப் பெயர்ச்சிக் காலத்தில் கெடுபலன்களே அதிகம் உண்டாகும். ஜாதக பலம் இருக்குமானால் கவலைப் படத் தேவையில்லை. இறைவழிபாடு மூலம் சங்கடங்களைக் குறைத்துக் கொள்ளலாம்.

## சிம்மம்:5

ஏழரைச் சனியின் காலம் முடிந்துவிட்டது. சனி 3-ல் உலவுவது மிகவும் விசேடமாகும். அதுவும் அவர் தனது உச்ச ராசியில் உலவுவதால் வெற்றி வாய்ப்புக்கள் அதிகரிக்கவே செய்யும். மனதில் துணிவும் தன்னம்பிக் கையும் கூடும். எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி பெறுவீர்கள். சமுதாய முன்னேற்றப் பணிகளில் ஈடுபடுவீர்கள். நிலபுலங்கள் சேரும். மேலதிகாரிகள், முதலாளிகளின் நல்லெண்ணங்களுக்குப் பாத்திரமாகி, உயர் பதவியைப் பெறுவீர்கள். உடன்பிறந் தவர் களால் நலம் உண்டாகும். குடும்பத்தில் சுப காரியங்கள் நிகழும். உடல்நலம் திருப்திகரமாக இருந்துவரும். தகவல் தொடர்பு இனங்கள் லாபம் தரும். 6-ஆம் வீட்டோன் 3-ல் தன் உச்ச ராசியில் இருப்பதால் எதிர்பாராத செல்வம் பெறுவீர்கள். 7-ஆம் வீட்டோன் வலுத்திருப்பதால் திருமணம் போன்ற சுபகாரியங்கள் நிகழும். பங்கு வர்த்தகம் லாபம் தரும். வெளியூர், வெளிநாட்டுத் தொடர்பால் அனுகூலம் உண்டாகும். சிறுசிறு பயணங்களை அடிக்கடி மேற்கொள்ளவும் அதனால் அனுகூலம் பெறவும் வாய்ப்பு உருவாகும். கூட்டுத் தொழிலில் அபிவிருத்தி காணலாம். பிற மொழி, மத, இனக்காரர்களால் அனுகூலம் உண்டாகும். பொது ஜனத்தொடர்பு வலுக்கும். உயர்பதவிகள், பொறுப்புகள் தேடிவரும். 15-11-2011 முதல் 10-10-2012 வரை புதிய சொத்துக்கள் சேரும். பெற்றோரால் நலம் பல பெறுவீர்கள். மனத்தில் துணிவும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும்.எடுத்த காரியத்தில் வெற்றி பெறுவீர்கள். உடன பிறந்தவர்கள் நலம் கூடப் பெறுவார்கள். அயல்நாட்டுத் தொடர்பால் அனுகூலம் உண்டாகும். 16-5-2012 முதல் 4-8-2012 வரை சனி வக்கிரமாக இருப்பதால் குடும்பத்தில் சில பிரச்னைகள் ஏற்படும். பொருளாதாரம் சம்பந்தப்பட்ட இனங்களில் விழிப்புத் தேவை. கண், வாய், முகம் சம்பந்தப்பட்ட உபாதைகள் ஏற்படும். உடல்நலனில் கவனம் தேவைப்படும். அதன்பிறகு சனி துலாத்துக்கே திரும்பி வந்துவிடுவார். துலாம் சர ராசி என்பதாலும் உபசய ராசி என்பதாலும் சுக்கிரனின் ராசி என்பதாலும் வெற்றி வாய்ப்புக்கள் தேடிவரும். சுபபலன்கள் தொடரும். 11-10-2012 முதல் 4-11-2013 வரை புதியவர்களது நேசம் கிடைக்கும். அயல்நாட்டு வர்த்தகம் பெருகும். போக்குவரத்து, ஏற்றுமதி-இறக்குமதி, தந்தை வழி பாட்டனாரால் நலம் பெறுவீர்கள். பயணம் செய்வதில் ஆர்வம் கூடும். பங்குமார்க்கெட், துறைகள் மூலம் பெரும் பணம் கைக்கு வந்து சேரும். தொடர்ச்சி..14ம் பக்கம்

Krefeld நகரில் உங்கள் அபிமான ஸ்தாபனம்

K.S.SHARAN SHOP



Ria MONEY TRANSFER

துரித பணமாற்றுச் சேவை

இலங்கை இந்திய தாய்லாந்து மரக்கறி மளிகைப் பொருட்கள் மற்றும், கடல் உணவுப்பொருட்கள் அனைத்தும் தரமாகவும், மலிவாகவும் எம்மிடம் கிடைக்கும். எமது ஸ்தாபனம் சனி,ஞாயிறு தினங்களிலும் திறந்தே இருக்கும்.

(KIOSK என்பதனால்)

தொலைபேசி அட்டைகளும் தரமானவை எம்மிடம் கிடைக்கும்

K.Sathees
Dreikonigen Str.34
47799 Krefeld

மாதத்தில் முதல் வாரம் என்றும் மலிவு விற்பனை!

Tel:02151 36 98 646
0176 24 899 229

சரஸ்வதி கல்யாணமாலை



இதோ ஒரு திருமணசேவை! பெற்றோர்களே கவலையைவிடுங்கள்! உங்கள் பிள்ளைகளுக்கு மணமகனையோ மணமகளையோ தேடிகஸ்டப் படாதீர்கள். கலாச்சார மேம்பாட்டனும் சாதகக் குறிப்புகளுடனம் நீங்கள் விரும்பியபடி மணமக்களை சிறப்பாகத் தேர்ந்தெடுக்க எம்மை நாடுங்கள். பல ஆண்டுகள் சேவையாற்றி நம்பிக்கை பெற்ற ஸ்தாபனம்

தொடர்புகளுக்கு: செல்வி:
0173 27 50 457- Tel: 02333 86 93 159
02333 86 93 165

அனைவருக்கும் எங்கள் இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்

13ம் பக்கத் தொடர்ச்சி....சிம்மம்.

குறுக்கு வழிகளில் செல்வம் சேரும் நேரமிது. டி.வி., பத்திரிகை போன்ற தகவல் தொடர்பு இனங்கள் மூலமாகவும் ஆதாயம் பெருகும். புத்திசாலித்தனம் பளிச்சிடும். திடீர் அதிர்ஷ்ட வாய்ப் புக்களும் உண்டாகும். செல்வச் செழிப்புக் கூடும். தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றிக் கொள் வீர்கள். கலைத்துறையினருக்கு வெற்றிகள் குவியும்.. பதவிச் சிறப்பு உண்டாகும். ஊதிய உயர்வு, இடமாற்றம் ஆகியவை கிடைக்கும். மொத்தத்தில் இந்தச் சனிப் பெயர்ச்சிக் காலத்தில் வெற்றி மேல் வெற்றி பெறுவீர்கள். வாழ்க்கைத் தரம் நிச்சயமாக உயரும். இந்த நல்ல நேரத்தைச் சரிவரப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

## கன்னி:6

உங்கள் ராசிக்கு 5, 6-ஆம் இடங்களுக்குரிய சனி 2-ஆமிடத்தில் உலவுகிறார். ஏழரைச் சனி தொடர்கிறது. என்றாலும் உங்கள் ராசிநாதன் புதனும் சனியும் ஒருவருக்கொருவர் நண்பர்கள் என்பதாலும், சனி தன் உச்ச ராசியில் உலவுவதாலும் இந்தச் சனிப்பெயர்ச்சிக் காலத்தில் பெரும்பாலான காலம் சனியானவர் குருவின் பார்வையைப் பெறுவதாலும் நற்பலன்களின் அளவு கூடி, கெடுபலன்கள் குறையும் என்று சொல்லலாம். 5-ஆம் வீட்டோனான சனி 2-ல் பலம் பெற்று இருப்பதால் மக்கள் நலம் மகிழ்ச்சி தரும். சனி 6-ஆம் வீட்டுக்கு அதிபதியாகி 2-ல் உலவுவதால் குடும்பத் தேவை களைச் சமாளிக்கக் கடன் வாங்க வேண்டிய நிலை ஏற்படும். குடும்பத்தில் சண்டை, சச்சரவுகள் உண்டா கும். கொடுத்த வாக்கை காப்பாற்ற முடியாமல் போகலாம். கண், முகம், வாய், பல் மற்றும் வாயு சம்பந்தமான உடல் உபாதைகள் ஏற்படும்.

15-11-2011 முதல் 10-10-2012 வரை முயற்சி வீண்போகாது. கடுமையாக உழைப்பதன் மூலம் வருமானம் கூடும். உடன்பிறந்தவர்கள் உதவுவார்கள். எதிர்பாராத பொருள்வரவு உண்டாகும். உடல்நலம் சீராகும். குடும்பத்தாரால் அனுகூலம் உண்டாகும். 17-5-2012 முதல் செல்வ நிலையில் விசேடமான வளர்ச்சி யைக் காணலாம். வெற்றி வாய்ப்புக்கள் அதிகரிக்கும். மகப்பேறு அல்லது மக்களால் பாக்கியம் பெறுவீர்கள். கூட்டாளிகளால் அனுகூலம் உண்டாகும். ஆகஸ்ட் 2012 முதல் குடும்பத்தில் சிறுசிறு சச்சரவுகள் ஏற்படும்.பணம் கொடுக்கல்-வாங்கலில் விழிப்புடன் ஈடுபடுவது நல்லது. சகோதர நலம் பாதிக்கும். உங்களுடைய ஆரோக்கியத் திலும் கவனம் தேவைப் படும். கண், வாய், பல், முகம் சம்பந்தப்பட்ட உபாதைகள் ஏற்படும். வீண் வம்பு, வழக்குகளைத் தவிர்க்கவும். 11-10-2012 முதல் 4-11-2012 வரை பிற மொழி, மத, இனங்களைச் சேர்ந்த வர்கள் உங்களுக்கு உதவும் காலகட்டமிது. பயன் படுத்திக் கொள்ளுங்கள். அயல்நாட்டுப் பயணத்திட்டம் ஈடேறும். கலைத்துறையினருக்கு வெற்றிகள் குவியும். 23-12-2012 முதல் குடும்ப நலம் கவனிக்கப்பட வேண்டிவரும். யாருக்கும் ஜாமீன் கொடுக்கவேண்டாம். பேச்சில் நிதானத்தைக் கடைப்பிடிப்பது அவசியமாகும். பாதிக்கப்பட நேரலாம். புதியவர்களை நம்பி எதிலும் ஈடுபட வேண்டாம். உணவுப் பழக்கத்தில் கட்டுப்பாடு அவசியம் தேவை. 5-11-2013 முதல் 1-11-2014 வரை புதிய சொத்துக்கள் இந்த நேரத்தில் சேரும். கண வனால் மனைவிக்கும் மனைவியால் கணவருக்கும் அனுகூலம் உண்டாகும். கூட்டுத் தொழிலில் அபிவிருத்தி காணலாம். குடும்ப நலம் சீராகும். எதிர்ப்புக்கள் குறையும். செய்து வரும் தொழில் லாபம் தரும். நோய்நொடி உபத்திரவங்கள் குறையும். 19-6-2014 முதல் முயற்சி வெற்றி தரும். மகன் அல்லது மகளால் முக்கியமான எண்ணங்கள் ஈடேறும். செல்வச் செழிப்புக் கூடும். திருமணம் ஆகாதவர்களுக்கு அதற்கான வாய்ப்புக் கூடிவரும். எழுத்தாளர்களும் பத்திரிகையாளர்களும் புகழும் பொருளும் பெறு வார்கள். பல வழிகளில் ஆதாயம் கிடைக்கும். 12-7-2014 முதல் அலைச்சல் அதிகரிக்கும். வாழ்க்கைத் துணைவராலும், கூட்டாளி களாலும் சிறுசிறு பிரச்னைகள் ஏற்பட்டு விலகும். மொத்தத்தில் இந்தச் சனிப்பெயர்ச்சிக்காலத்தில் நல்லதும் அல்லாததுமான பலன்கள் கலந்தவாறு ஏற்படும். சனிப் பிரீதி, பரிகாரங்களைத் தொடர்ந்து செய்துவரவும்.

## துலாம்7

உங்கள் ராசிக்கு ஏழரைச் சனியின்காலத்தில் ஜன்மச் சனியின் காலம் ஆகும் இது. கோசாரப்படி இது விசேடமாகாது என்றாலும் சனியானவர் உங்கள் ராசிக்கு 4, 5-ஆம் இடங்களுக்கு அதிபதியாகி, ஜன்ம ராசியில் உச்ச பலத்துடன் சஞ்சரிப்பதால் நலமே புரிவார். இதுவரையில் நீங்கள் பட்ட கஷ்டங்கள் விலகும். வீண் விரயங்கள் இனிமேல் இருக்காது. உடல்நலமும் சீராகும். மன பலம் கூடும். உற்சாகமாக நடைபோடு வீர்கள். நல்ல இடமாற்றம் உண்டாகும். தொழிலிலும் மாற்றத்தைக் காண்பீர்கள். பயணம் செய்வதில் ஆர்வம் கூடும். கலைஞானம் உண்டாகும். சொத்துக்கள் சேரும். மகப்பேறு அல்லது மக்களால் பாக்கியம் உண்டாகும். அலைச்சலும் உழைப்பும் அதிகமா னாலும் கூட அதனால் பயனும் அதிகமாகும். 15-11-2011 முதல் 10-10-2012 வரை அந்தஸ்தும் மதிப்பும் செல்வாக்கும் உயரும். செல்வ நிலையில் அபிவிருத்தி காணலாம். குடும்பத்தில் குதூகலம் உண்டாகும். சுப காரியங்கள் நிகழும். கூட்டாளிகள் உதவுவார்கள். நிலபுலங்களால் வருமானம் கிடைக்கும். கொடுக்கல்-வாங்கல், 16-5-2012 முதல் 4-8-2012 வரையிலும் உள்ள காலத்தில் சற்று எச்சரிக்கை தேவை. எதிர்பாராத செலவுகள் ஏற்படும். சொத்துக்கள் சம்பந்தப்பட்ட பிரச்னைகள் உண்டாகும். மக்கள் நல முன்னேற்றத் துக்காகச் செலவு செய்ய வேண்டிவரும். மருத்துவச் செலவுகளும் கூடும். 11-10-2012 முதல் 4-11-2013 வரை அந்நிய மொழி, மத, இனக்காரர்களால் அனுகூலம் பெற வாய்ப்பு உண்டாகும். திடீர்ப் பொருள்வரவுக்கு இடமுண்டு. வெளிநாட்டுத் தொடர்புடன் செய்யும் தொழில் மேன்மை அடையும். சிலருக்கு வெளிநாட்டு வேலை இந்த நேரத்தில் கிடைக்கும். கலைத்துறையினருக்கு முன்னேற்றமான சூழ்நிலை உருவாகும். 23-12-2012 முதல் அலைச்சல் சற்று அதிகரிக்கவே செய்யும். கூட்டாளிகளால் பிரச்னைகள் ஏற்படக் காரணம் உண்டு விழிப்புடன் இருக்கவும். வாழ்க் கைத்துணை நலன் கவனிக்கப்பட வேண்டிவரும்.31-5-2013 முதல் உடன்பிறந்தவர்களாலும் மக்களாலும் விசேடமான நன்மைகளை எதிர்பார்க் கலாம். தெய்வப் பணிகள் நிறைவேறும். உடல்நலம் சீராகவே இருந்து வரும். மதிப்பும் அந்தஸ்தும் உயரும். தொலைதூரப் பயணம் ஆக்கம் தரும். 5-11-2013 முதல் 1-11-2014 வரை முக்கியமான எண்ணங்கள் இப்போது நிறை வேறும். தகவல் தொடர்பு இனங்கள் லாபம் தரும். உழைப்பு வீண்போகாது. எதிர்ப்புக்கள் இருக்கு மென்றாலும் சமாளிப்பீர்கள். உடல்நலம் அவ்வப்போது கவனிக்கப்பட வேண்டிவரும். தேவைகளைச் சமாளிக்கச் சிலர் கடன்வாங்க வேண்டிவரும். மக்களாலும் வாழ்க்கைத் துணைவராலும், பங்குதாரர்களாலும் பிரச்னைகள் சூழும். சொத்துக்கள் சம்பந்தமான காரியங்களில் விழிப்புடன் ஈடுபடவும். குறுக்கு வழிகளில் பிரவேசிக்கலாகாது. செய்து வரும் தொழிலில் முழுக்கவனம் தேவை. பெரியவர்கள், தனவந்தர்கள், மேலதிகாரிகள், முதலாளிகள் ஆகியோருடன் சுமுகமாகப் பேசிப் பழகுவது அவசியமாகும். இல்லை யென்றால் அவர்களது கோபத்துக்கு ஆளாகி, சங்கடப்பட நேரும். பணம் கொடுக்கல்-வாங்கலில் எச்சரிக்கை தேவை.மொத்தத்தில் இந்தச் சனிப் பெயர்ச்சிக் காலம் ஓரளவு சிறப்பாக இருக்கும்.


## விருச்சிகம் :8

ஏழரைச் சனி ஆரம்பமாகிறது. கோசாரப்படி இது அனுகூலமான நிலை ஆகாது. என்றாலும் சனி 3, 4-ஆம் இடங்களுக்கு அதிபதியாகி, 12-ல் தன் உச்ச ராசியில் இருப்பதாலும், 3, 4-ஆம் இடங்களுக்கு அனுகூலமான இடத்தில் சனி உலவுவதாலும் சில நன்மைகளும் உண்டாகும். உடன்பிறந்த இளைய சகோதர, சகோதரிகளின் வாழ்வு சிறக்கும். அவர்களுக்கு நல்ல வேலைவாய்ப்பு அமையும். பழைய சொத்துக்களை விற்றுப் புதிய சொத்துக்கள் வாங்க வாய்ப்பு உண்டாகும். மக்களால் சில பிரச்னைகள் சூழும். வாழ்க்கைத்துணைவரின் உடல்நலனில் கவனம் தேவை. வீண்விரயம் ஏற்படும். தேவையில்லாத, அனாவசிய செலவுகள் அதிகரிக்கும். சிக்கன நடவடிக் கையை மேற்கொள்வது நல்லது. கைப்பொருளைப் பத்திரப படுத்தி வைத்துக் கொள்வதும் அவசியமாகும். மேலும் இந்தச் சனிப் பெயர்ச்சிக் காலத்தில் ரிஷபத்திலும், கடகத்திலும் குரு உலவும் நிலை அமைவதாலும், பெரும்பாலான காலம் சனி குருவின் பார்வையைப் பெறுவதாலும் நற்பலன்களும் உண்டாகும் என்று உறுதியாகச் சொல்லலாம். மேலும் ஜனன கால ஜாதகப்படி இந்த நேரத்தில் யோக பலம் உள்ள தசை, புக்தி, அந்தரங்கள் நடைபெறுமானாலும் கவலைப்படத் தேவையில்லை. என்றாலும் சனிப் பிரீதி அவசியம் செய்யவேண்டும். 15-11-2011 முதல் 10-10-2012 வரை செல்வ நிலையில் அபிவிருத்தி காண வாய்ப்பு உண்டாகும். மதிப்புக்கும் அந்தஸ்துக்கும் குறைவிராது. வாழ்க்கைத்துணைவரால் நலம் பெறுவீர்கள். மக்கள் நலனுக்காகச் செலவு செய்வீர்கள். உடன்பிறந்தவர்கள் உங்களுக்குப் பக்கபலமாக இருப்பார்கள். பொறியியல் துறை லாபம் தரும். 17-5-2012 முதல் குரு 7-ஆமிடம் மாறுவதால் பொருள்வரவு கூடும். வாழ்க்கைத் துணைநலம் சீராகும். கூட்டுத் தொழிலில் அபிவிருத்தி காணலாம். பல வழிகளில் ஆதாயம் கிடைக்கும். 26-6-2012 முதல் நீண்ட நாளைய எண்ணங்கள் ஈடேற வழிபிறக்கும். காரியத்தில் வெற்றி கிட்டும்.

11-10-2012 முதல் 4-11-2013 வரை அலைச்சல் அதிகமாகும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவைப் படும். பயணத்தின்போதும், வண்டி, வாகனங்களைப் பயன்படுத்தும்போதும் எச்சரிக்கை தேவை. பராமரிப்புச் செலவுகள் அதிகமாகும். 23-12-2012 முதல் கால் பாதம் சம்பந்தப்பட்ட பிரச்னைகள் ஏற்படும். பயணத்தின்போது பொருள் காணாமல் போகும். வீண்செலவுகளும் இழப்புகளும் கூடும். கைப்பொருளைப் பத்திரப்படுத்தி வைத்துக் கொள்வது அவசியமாகும். தூக்கம் கெடும். மனதில் ஏதேனும் பயம் இருக்கும். தொழிலில் விரும்பத்தகாத இடமாற்றம், நிலைமாற்றம் ஆகியவை ஏற்படும். 31-5-2013 முதல் எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புகள் கூடிவரும். மக்களால் மன அமைதி கெடும். இருப்பிடத்தில் மாற்றம் செய்து கொள்வீர்கள். அந்த மாற்றமும் திருப்திகரமாக அமையாது. குரு, சனி, ராகு ஆகியோருக்குப் பிரீதி, பரிகாரங்களைச் செய்து கொள்ளவும். 5-11-2013 முதல் 1-11-2014 வரை பண வரவு அதிகரிக்கும் நேரமிது. குடும்பத்தில் குதூகலம் உண்டாகும். விருந்து, உபசாரங்களில் பங்கு கொள்வீர்கள். மக்கள் நலம் சீராகும். 19-6-2014 முதல் தொலைதூரத் தொடர்பால் அதிகம் நலம் உண்டாகும். மகப்பேறு அல்லது மக்களால் பாக்கியம் கிடைக்கும். திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் கூடிவரும். சொத்துக்கள் சேரும். மதிப்பு உயரும். முயற்சி வீண்போகாது. தெய்வப் பணிகளிலும் தர்மப்பணிகளிலும் ஈடுபடுவீர்கள். உத்தியோகஸ்தர்களது நிலை உயரும். 12-7-2014 முதல் ஏற்றுமதி-இறக்குமதி இனங்கள் லாபம் தரும். குறுக்கு வழிகளில் பணம் சேரும். மொத்தத்தில் இந்தச் சனிப்பெயர்ச்சிக்காலத்தில் எதிலும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து ஈடுபடுவது அவசியமாகும். வீண் விவகாரங்களில் தலையிட வேண்டாம். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். தொடர் ...16ம் பக்கம்.





# ஈழத்தமிழ்பெருமகன்

## திரு. இரா. நாகலிங்கம்.

கடந்த 17.12.2011 அன்று,ஜேர்மனி போகும் நகரில் தமிழ்க்கல்விக் கழகத்தின் பொறுப் பாளராகவிருந்து அர்ப்பணிப்புடன் இனமான உணர்வுடன் புலத்தில் மொழிக்காகச் சேவை செய்த ஆசிரியர் திரு.இரா.நாகலிங்கம் அவர் களுக்கு அவரின் சேவையைப் பாராட்டி „ஈழத்தமிழ் பெருமகன்“ என்ற சிறப்புமதிப்பளிப்பு கௌரவிக்கப்பட்ட நிகழ்ச்சியினை தமிழர் ஒருங்கிணைப்புக் குழு ஏற்பாடு செய்திருந்தது. தமிழ்க்கல்விக் கழகத்தின் ஆசிரியர்கள், மாணவர்கள், பெண்கள் அமைப்பினர், பொதுமக்கள் என மண்டபம் நிறைந்த மக்கள் புடைசூழ இவ்விழா சிறப்பாக இடம் பெற்றிருந்தது.

இவ்விழாவில் தமிழர் ஒருங்கிைப்புக்குழுச் செயல் பாட்டாளர்கள், தமிழக்கல்விக்கழகச் செயல் பாட்டாளர்கள், கல்வியாளர்கள் எனப் பலரின் உரைகள் தமிழாலயத் தந்தை, நற்றமிழ்குருமணி தமிழ் மொழிக்காவலன், தமிழேந்தல் போன்ற கௌரவப் பெயர்களுக்கு உரித்துடையவரான ஆசிரியர் திரு.இரா. நாகலிங்கம் அவர்களின் மொழிசார் பணியை பாராட்டி வாழ்த்துரைத்து மகிழ்ந்தனர்.

கொழும்பு பல்கலைக்கழக சமூக அறிவியல் துறைப் பேராசிரியர் திரு.சோமசந்தரம் சந்திர சேகரன் அவர்கள், சிறப்புமதிப்பளிப்பு பெறுநர் அவர்களின் பணியை மதித்து உரையையாற் றுகையில் „புலம்பெயர் வாழ்வியலில் அன்றாட சமூக இடர்ப்பபாடுகள்,தடைகளுக்கும் மத்தியி லும் ஒரு புரட்சியாளனாக தான் நினைத்ததைச் சாதிக்கும் வல்லோனாக தமிழ் இனத்திற்காக உழைத்தமை தமிழர் வரலாற்றில் ஒரு காலப்பதிவு“ எனப் புகழ்ந்துரைத்த அவர் பண்பாட்டின் அடிச்சுவட்டிலிருந்து சற்றும் பிசகாமலும், நாகரீகத்தைப் பேணி வாழ்தலை மற்றைய இனங்களால் மதிப்புடன் பார்ப்பதற்கான வேறுபாட்டை ஒப்பீடு செய்து உரை யாற்றினார். ஆசிரியர் அவர்களின் தமிழ்மொழிப் பணியை கௌரவிக்கும் நோக்கில் அவருக்கு „ஈழத்தமிழ் பெருமகன்“என்ற சிறப்பு மதிப்புளிப்புப் கௌரவப் பெயரை தமிழர் ஒருங்கிணைப்புக் குழு வழங்கிக் கௌரவித்தது.

தமிழகத்தில் திரு.பழ. நெடுமாறன் தலைமையில் இயங்கி வரும் உலகத்தமிழ்ப் பேரவை வருடாவருடம் தமிழ்ப் பணிக்காக கொடுத்து கௌர விக்கும் “உலகத்தமிழ் பெருமகன்“என்ற கௌரவ விருதினை, கலாநிதி முருகர் குணசிங்கம் அவர்கள் ஊடாக ஆசிரியர் திரு.இரா.நாகலிங்கம் அவர்களுக்கு கொடுத்து கெரவித்தது.

பழ.நெடுமாறன்,சீமான்,மணிவண்ணன் ஆகியோர் வாழ்த்தி உரைத்த ஒளிப்பதிவு இவ்விழாவில் ஒளிபரப்பப்பட்டது. கௌரவத்தை ஏற்றுக் கொண்ட ஆசிரியர் திரு.இரா.நாகலிங்கம் அவர்களின் ஏற்புரையுடன் விழா நிறைவு பெற்றது.

-அவதானி




# ஒரே அச்சில் சுழன்ற யேர்மன் தமிழ் கலைகள்!

யேர்மன் தமிழ் கலாச்சார மாலை. யேர்மனியில் கடந்த 17.12.2012 சனிக்கிழமை சோஸ்ற் நகரத்தில் இடம் பெற்றது. நிகழ்சியினை சோஸ்ற் யேர்மன், தமிழர், விளையாட்டு,கல்வி கழகத்தினர் ஏற்பாடு (Tamilisch Deutscher Sport,Kultur und Schulverein.ev. ) செய்திருந்தனர்.

மங்கல விளக்கினை யேர்மன் மக்கள் ஏற்றி வைக்க,வரவேற்பு நடனத்தை தமிழ் மாணவிகள் சிறப்புற ஆடினர். சிறுவர் நடனம் வீணை, திரை இசை நடனம் நகைச்சுவைக் கதம்பம் என தமிழ்க் கலைஞர் நிகழ்வுகளும், யேர்மன் மாணவிகளது மேற்கத்திய நடனமும்,சீன மக்களது நடனமும் இடம் பெற்றது.

ஒரே மேடையில் மாறி நாற்திசையிலும் வாழும் மக்களது கலை வடிவங்களைக் காணும் அரிய வாய்ப்பாக அமைந்தது.

வெற்றிமணி ஆசிரியர் மு.க.சு.சிவகுமாரன் சிறப்பு விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார். அவர் தனது உரையில் ஒரு அச்சில் சுழலும் பூமிபோல் இங்கு ஒரே மேடையில் இப்பூமியில் உள்ள அழகிய கலைகள் சுழன்று சுழன்று ஆடின. கலைகளுக்கு மொழியில்லை என்பதனை யேர்மன் தமிழ் கலைமாலை சிறப்பாக எடுத்தியம்பியது. அங்கு உரையாற்றிய சமூகசேவகி (süden) தருமதி Brigittesehrmi யேர்மன் தமிழ் விளையாட்டு கல்வி நிறுவனத்தினை கட்டி எழுப்ப உங்கள் கலைஞர்களும் கல்வி மான்களும் முன்வரவேண்டும், என வேண்டுகோள் விடுத்தார்.

அவர் தமிழ்ப் பெண்கள் போல் சேலையில் வந்து எல்லோரையும் கவர்ந்தார். சேலையையும் மிஞ்சி அவரது அளவனா பேச்சும், கலைஞர்களை மெச்சிய தன்மையும் அழகாக இருந்தது. நாம் அவர்களிடம் இருந்து கற்கவேண்டிய பாடங்கள் இரண்டு.

1.மேடையில் அளவாகப் பேசுதல். 2. மேடையில் குறைகளை குறுக்கி நிறைகளை மொழிதல்.

நல்ல பண்பாட்டு பரிமாற்றங்களுக்கு இது போன்ற விழாக்கள் உதவும். நல்லதை எங்கிருந்தும் பெறலாம்.

ஸ்ரீ வீராட் விஸ்வ குலபிரமனே நமக!
வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் துணை

E.S.T.M Jewellery & Schmuck

நவீன உயர்தர டிசைன்களில் நகைகள், திருமண ஆபரணங்கள், ஓடர் நகைகள், திருத்த வேலைகள், யாவும் செய்து கொடுக்கப்படும். தாலிக்குப் பொன்னுருக்குதல், காது மூக்குக்குத்துதல் போன்ற நல்ல காரியங்களும் செய்து கொடுக்கப்படும். பழைய நகைகளுக்குப் பதிலாக சிங்கப்பூர் நகைகள் மாற்றிக் கொடுக்கப்படும்.

Rheinische Str.73
44137 Dortmund

உரிமையாளர்:
சின்னத்துரை தயாகரன்
Handy:01633642642



14ம் பக்கத் தொடர்ச்சி...

**தனுசு9**

சனிமாற்றம் விசேடமான நன்மைகள் உண்டாகும் நேரமிது. 2-ஆம் வீட்டோன் 11-ல் உலவுவதால் பொருளாதாரச் செழிப்பு உண்டாகும். பல வழிகளில் வருமானம் கிடைக்கும். குடும்ப நலம் சிறக்கும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். 3-ஆம் வீட்டோன் 11-ல் இருப்பதால் இளைய சகோதர, சகோதரிகளால் அனுகூலம் உண்டாகும். மனத்தில் துணிவும் தன்னம்பிக்கையும் கூடும். தகவல் தொடர்பு, கொடுக்கல்-வாங்கல், கலைத்துறை, சட்டத்துறை, கல்வித்துறை ஆகியவற்றில் ஈடுபாடு உள்ளவர்கள் தங்கள் நிலை உயரப் பெறுவார்கள். சமுதாய நலப்பணியாளர்கள் புகழ் பெறுவார்கள். உயர்பதவி, பட்டங்கள் தேடிவரும். பொதுஜனத் தொடர்பு வலுக்கும். சனி சர ராசியில், சுக்கிரனின் வீட்டில், தன் உச்ச ராசியில் இருப்பதால் வெளியூர், அழகுப் பொருட்கள் சேரும். புதிய துறைகளில் முதலீடு செய்ய வாய்ப்புக் கூடிவரும். பல வழிகளில் ஆதாயமும் கிடைக்கும். குடும்பத்தில் சுப காரியங்கள் நிகழும். அடிவயிறு சம்பந்தமான உபாதைகள் ஏற்பட்டு விலகும்.

15-11-2011 முதல் 10-10-2012 வரை பொருளாதார நிலை உயரும். பல வழிகளில் ஆதாயம் வந்து சேரும். கொடுக்கல்-வாங்கல் இனங்களில் ஈடுபாடு உள்ளவர்கள் அதிகம் பயன்பெறு வார்கள். இயந்திரங்கள் லாபம் தரும். திருமணம் போன்ற சுப காரியங்கள் நிகழும். திருமணம் ஆனவர்களுக்கு மகப்பேறும் மக்களால் பாக்கியமும் உண்டாகும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படும் என்பதால் சிக்கனத்தைக் கையாள்வது நல்லது. சிலருக்கு இடமாற்றம், நிலைமாற்றம் ஆகியவை ஏற்படும். 16-5-2012 முதல் 4-8-2012 வரை சகோதர நலனில் கவனம் தேவைப்படும். தொழிலில் முன்னேற்றம் காணக் குறுக்கீடுகள் முளைக்கும். மக்கள் நலனில் அக்கறை செலுத்த வேண்டிவரும். அதன்பிறகு பொருளாதார நிலை உயரும். கொடுக்கல்-வாங்கல் லாபம் தரும். உடன்பிறந்தவர்களின் நலம் சீராகும்.

11-10-2012 முதல் 4-11-2013 வரை வெளிநாட்டுத் தொடர்பால் அதிகம் நலம் உண்டாகும் நேரமிது. வேற்று மத, மொழி, இனக்காரர்கள் உங்களுக்குப் பெரிதும் உதவுவார்கள். திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் கூடிவரும். குறுக்கு வழிகளிலும் ஆதாயம் பெறுவீர்கள். ராகுவும் சனியும் 23-12-2012 முதல் லாப ஸ்தானத்தில் உலவும் நிலை அமைவதால் வீடு மாற்றம், தொழில் மாற்றம் ஆகியவை உண்டாகும். பல வழிகளிலும் ஆதாயம் கிடைக்கும். வெளிநாட்டுப் பயணத்திட்டம் கைகூடும். கலைத் துறையினருக்கு வெற்றிகள் குவியும். போக்குவரத்து, ஏற்றுமதி,இறக்குமதிகளால் ஆதாயம் பெருகும். தாய் நலனில் கவனம் செலுத்த வேண்டிவரும். மக்களாலும் சில இடர்ப்பாடுகள் உண்டாகும். காது, கால் சம்பந்தப்பட்ட உபாதைகள் சிலருக்கு ஏற்படும். 5-11-2013 முதல் 1-11-2014 வரை. செல்வாக்கும் மதிப்பும் உயரும். நிலம், மனை, வீடு, வாகனம் போன்ற சொத்துக்கள் சேரும். சொத்துக்களால் ஆதாயமும் இப்போது கிடைக்கும். மாணவர்கள் வெற்றி நடைபோடுவார்கள். தாய் நலம் சீராகும். செய்து வரும் தொழிலில் அபிவிருத்தி காண வாய்ப்புக்கூடிவரும். பதவி உயர்வு, இடமாற்றம், ஊதிய உயர்வு ஆகியவை கிடைக்கும். வாழ்வில் முன்னேற்றம், காண நல்ல வாய்ப்புகள் கூடிவரும். விவசாயிகளும் தொழிலா ளர்களும் உத்தியோகஸ்தர்களும் தங்கள் எண்ணம் ஈடேறப் பெறுவார்கள். அயல்நாட்டுத் தொடர்பு வலுக்கும்.

**மகரம்10**

எடுத்த காரியங்கள் நிறைவேறும். அந்தஸ்தும் மதிப்பும் உயரும். புதிய முயற்சிகள் கைகூடும். செல்வ நிலையில் விசேடமான வளர்ச்சி காணலாம். எதிர்பாராத பொருள்வரவுக்கும் இடமுண்டு. குடும்பத்தில் சுப காரியங்கள் நிகழும். பதவிச் சிறப்பு உண்டாகும். தலைமை தாங்கும் தகுதியைப் பெறுவீர்கள். உடல்நலம் சீராகும். மன பலம் கூடும். பொது நலப்பணிகளில் ஈடுபட்டு நற்பெயர் பெறுவீர்கள். பூமியால் லாபம் உண்டாகும். புதிய சொத்துக்களும் சேரும். உழைப்புக்கும் திறமைக்கும் உரிய பயன் நிச்சயம் கிடைக்கும். சகோதர, சகோதரிகளின் நலனில் கவனம் தேவை. பெற்றோருக்கும் மக்களுக்குமிடையே சில கருத்து வேறுபாடுகள் ஏற்படும். விட்டுக்கொடுத்துப் பழகுவது அவசியமாகும். தொழில் ரீதியாகச் சிலர் இடமாற்றம் பெறுவார்கள். கலை, வாக்கு, பொருள் கொடுக்கல்-வாங்கல், எண்ணெய் வகையறாக்கள், பழைய பொருட்கள், கலைப்பொருட்கள் போன்றவற்றால் வருமானம் கூடப் பெறலாம். 15-11-2011 முதல் 10-10-2012 வரை புதிய பொருட்களும் சொத்துக்களும் சேரும். மாணவர்களது நிலை உயரும். இயந்திரங்கள் லாபம் தரும். மூத்த சகோதர, சகோதரிகளால் சிறுசிறு பிரச்னைகள் சூழும். குறுக்கு வழிகளில் ஈடுபடலாகாது. 17-5-2012 முதல் மக்கள் நலம் சீராகும். சகோதர நலம் சீராகும். நீண்ட நாளைய எண்ணங்கள் நிறைவேறச் சந்தர்ப்பம் உருவாகும்.. மக்கள் நல முன்னேற்றப் பணிகளில் ஈடுபடுவீர்கள். மகனுக்கோ, மகளுக்கோ திருமணம் ஆக வாய்ப்பு உண்டாகும். 11-10-2012 முதல் 4-11-2013 வரை பயணம் செய்வதில் நாட்டம் கூடும். பயணத்தால் அனுகூலமும் பெறுவீர்கள். ஒன்றுக்கு மேற்பட்ட துறைகளால் வருமானம் கிடைத்துவரும். வேலையாட்களால் அனுகூலம் உண்டாகும். மாறுபட்ட கருத்துக்களை வெளியிடுவீர்கள். இடமாற்றம், நிலை மாற்றம் ஆகியவை ஏற்படும். தொழில் ரீதியாக ஒரு மாற்றம் ஏற்படும். 5-11-2013 முதல் 1-11-2014 வரை உடன்பிறந்தவர்கள் உதவி புரிய முன்வருவார்கள். சுப காரியங்களுக்காகச் செலவு செய்ய வேண்டிவரும். வெளிநாட்டு வேலை சிலருக்கு இந்த நேரத்தில் கிடைக்கும். மக்களால் சில இடர்ப்பாடுகள் உண்டாகும். எலக்ட் ரானிக், கம்ப்யூட்டர் மற்றும் ரேடியோ, வீடியோ, டி.வி., பத்திரிகை போன்ற துறைகளைச் சேர்ந்தவர் களுக்குச் செழிப்புக் கூடும். மாணவர்களது நிலை உயரும். நல்லவர்களது தொடர்பால் நலம் பல பெறுவீர்கள். 19-6-2014 முதல் செல்வ வளம் மேலும் கூடும். கணவன் மனைவி உறவு நிலை சிறக்கும். கூட்டாகத் தொழில் செய்பவர்கள் லாபம் கூடப் பெறுவார்கள். சுப காரியங்கள் நிகழ வாய்ப்புக் கூடிவரும். செய்தொழிலில் அபிவிருத்தி காணலாம். தெய்வப் பணிகள் நிறைவேறும். தியானம், யோகா ஆகியவற்றில் ஈடுபடுவீர்கள். மனத்தில் தெளிவும் தன்னம்பிக்கையும் உண்டாகும். மொத்தத்தில் இந்தச் சனிப்பெயர்ச்சிக் காலம் ஓரளவுக்குச் சிறப்பானதாக அமையும்.

**கும்பம்:11**

இதுவரையிலும் அனுபவித்து வந்த துன்பங்களும் துயரங்களும் இனி விலகும். மன அமைதிக்குறைவும் நீங்கும். தெளிவான பாதை புலப்படும். தெய்வ காரியங்களிலும் தர்ம காரியங்களில் ஈடுபடுவீர்கள். உடல் ஆரோக்கியம் சீராகும். மன பலமும் கூடும். தந்தையை விட்டுப் பிரிந்திருக்க வேண்டிவரலாம். சுபச் செலவுகள் ஏற்படும். குடும்பத்தாரால் சில குழப்பங்கள் ஏற்பட்டு விலகும். தாய் நலனில் கவனம் தேவைப்படும். சொத்துக்கள் சம்பந்தப்பட்ட பிரச்னைகள் ஏற்படக் காரணம் உண்டு எச்சரிக்கை தேவை. வீண் வம்பு, வழக்குகளைத் தவிர்க்கவும்.

15-11-2011 முதல் 10-10-2012 வரை மனதில் துணிவும் தன்னம்பிக்கையும் கூடும். எதிரிகள் அகலுவார்கள். போட்டிப் பந்தயங்களில் வெற்றி கிட்டும். செய்து வரும் தொழிலில் முழு ஈடுபாடு கொண்டு வளர்ச்சி காண்பீர்கள். பண நடமாட்டம் அதிகரிக்கும். கடன் தொல்லை குறையும். தெய்வ காரியங்களை நிறைவேற்றிக் கொள்வீர்கள். சொத்துக்கள் சேரும். 16-5-2012 முதல் குடும்பத்தில் சலசலப்புக்கள் உண்டாகும். பொருள் கொடுக்கல்-வாங்கலில் விழிப்புத் தேவை. வீண்வம்பு கூடாது. மக்கள் நலனில் கவனம் தேவை. தொழில் ரீதியாகச் சில மாற்றங்கள் உண்டாகும். என்றாலும் திருப்திகரமாக அமையாது. 4-8-2012 முதல் நற்காரியங்களில் ஈடுபாடு உண்டாகும். தொலைதூரத் தொடர்பு பயன்படும்.

11-10-2012 முதல் 4-11-2013 வரை அயல்நாட்டுத் தொடர்புடன் செய்யும் தொழில் லாபம் தரும். வெளி நாட்டுப் பயணத்திட்டம் நிறைவேறும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். செய்தொழிலில் நல்ல மாற்றங்கள் ஏற்படும். அதனால் ஏற்றமும் உண்டாகும். வீடு மாற்றமும் சிலருக்கு இந்த நேரத்தில் அமையும். எதிர்பாராத திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புக்களும் கூடிவரும். 23-12-2012 முதல் தொலைதூரத் தொடர்பால் அனுகூலம் உண்டாகும். தந்தை நலம் பாதிக்கும். ஆன்மிகத்தில் ஈடுபாடு உண்டாகும். வாழ்க்கைத் துணைவரின் குடும்பத்தாரால் பிரச்னைகள் சூழும். 31-5-2013 முதல் சுப காரியங்கள் நிகழ வாய்ப்புக் கூடிவரும். பொருளாதார நிலையில் வளர்ச்சி காண வழிபிறக்கும். தந்தை நலம் சீராகும். மதிப்புக்குக் குறைவிராது. மகப்பேறும் மக்களால் பாக்கியமும் உண்டாகும்.

5-11-2013 முதல் 1-11-2014 வரை குடும்பத்தில் சுப காரியங்கள் நிகழும். பேச்சாற்றல் வெளிப்படும். செல்வ வளம் பெருகும். பல வழிகளில் வருமானம் வந்து சேரும். தன, லாபம் பெருகும். அரசியல், நிர்வாகம், ஆன்மிகம், சட்டம், மருத்துவம், இரசாயனம், விஞ்ஞானம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் முன்னணிக்கு உயருவார்கள். உயர் பதவிகளும் பட்டங்களும் வந்து சேரும். 19-6-2014 முதல் சோதனைகள் அதிகரிக்கும். எதிலும் யோசித்து ஈடுபடவும். பொருளாதார சிக்கல் உருவாகும். கடன் தொல்லை உண்டாகும். குடும்பத்தாராலும், பிற மொழி, மதக்காரர்களாலும் பிரச்னைகள் சூழும். வீண் வம்பு வேண்டாம். உடல்நலம் கவனிக்கப்பட வேண்டிவரும். பயணத்தால் அனுகூலமிராது.

எதிலும் வேகத்தைக் குறைத்துக் கொள்ளவும். பெரியவர்களின் அதிருப்திக்கு ஆளாகாமல் இருப்பது நல்லது.

**மீனம்:12**

அஷ்டம சனியின் காலமிது. சிறப்பாகாது. எதிலும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து ஈடுபடுவது அவசியமாகும். குறுக்கு வழிகளில் ஈடுபடலாகாது. நேரான பாதையில் செல்வதன் மூலம் சங்கடங்களுக்கு ஆளாகாமல் மீளலாம். வீண் வம்பு, வழக்கு சண்டை, சச்சரவுகளைத் தவிர்க்கவும். உடல் நலம் கவனிக் கப்பட வேண்டிவரும். தண்டச் செலவுகள் ஏற்படும். செய்யாத குற்றத்துக்கு நீங்கள் தண்டனையைப் பெற நேரலாம். கெட்டவர்களின் தொடர்பை அறவே விட்டு விலகுவது அவசியமாகும். தொழிலில் முன்னேற்றம் காண்பது அரிது. விரும்பத்தகாத இடமாற்றம், நிலைமாற்றம் ஆகியவை உண்டாகும். பொருள் களவு போகும். சொத்துக்களை இழக்க வேண்டிவரலாம். நீண்ட நாள் நோய்வாய்ப்பட்டிருப்பவர்கள் எச்சரிக்கை யுடன் இருப்பது அவசியமாகும். உடன்பிறந்தவர்களின் நலம் பாதிக்கும்.

பேச்சிலும் உணவுப் பழக்கத்திலும் கட்டுப்பாடு தேவை. மக்களால் மன அமைதி குறையும். செய்தொழில் எதுவானாலும் அதில் அதிகம் கவனம் செலுத்தி, அயராது பாடுபடுவது அவசியமாகும். உங்களுடைய பொறுப்புகளை மற்றவர்களிடம் ஒப்படைக்கலாகாது. அகப்பட்டவனுக்கு அஷ்டம சனி என்பார்கள். இதனால் எதிலும் எச்சரிக்கை தேவை. ஜனன கால ஜாதகப்படி தற்சமயம் யோக பலம் உள்ள தசை, புக்தி, அந்தரங்கள் நடைபெறுமானால் கவலைப்படத் தேவை யில்லை. இறைவழிபாட்டிலும், கிரக வழிபாட்டிலும் முழு நம்பிக்கையுடன் ஈடுபடவும். அதன்மூலம் சங்கடங் களைக் குறைத்துக்கொள்ள முடியும். சனிக்கு நல்லெண்ணெய் விளக்கேற்றி வழிபடுங்கள். கோளறு பதிகம் சொல்லுங்கள்.

தொடர்ச்சி.17ம் பக்கம்....

Dortmund நகரில்
lager verkaufen
குத்தரிசி 10 கிலோ-4.99
இரண்டு பக்கட் (20கி.லோ) அரிசி வாங்கினால்
ஒரு பக்கட் (10.கிலோ அரிசி இலவசம்)
குரக்கன் அரிசி ஒரு கிலோ 2.50
4 வாங்கினால் ஒன்று இலவசம்
சனிஞாயிறு திறக்கப்படும்.
Blumen str 22
44137 Dortmund
தொடர்புகளுக்கு
Tel:0176 73 56 43 32

மங்கல வாத்திய இசை
திருமண விழாக்களா,பூப்புனிதநீராட்டு வைபவமா,
மற்றும்,தமிழர் கலைபண்பாட்டு விழாக்களா,
திருவிழாக்களா,மங்கல இசை முழங்க
தமிழ் இசையில் மெய்மறக்க
அழையுங்கள்
கலைஞான சுடரொழி
ஐரோப்பிய தவில் சக்கரவத்தி
K.P.செல்வநாயகம்
Tel:0202 27 13 698/ 0202 27 13 699
Handy: 0176 32 76 38 62



Nirubagini Magendiran
மொழிபெயர்ப்பாளர்
தமிழ் - யேர்மன்
யேர்மன் - தமிழ்
Tamil- Deutsch -Deutsch- Tamil
Tel: 0176/ 24012135
Email: nirumagendiran@hotmail.com
Vereidigte Dolmetscherin und
ermächtigte Übersetzerin

Tee Kaffee Und Mehr
குத்தரிசி பொன்னி அரிசி சிவப்புப்பச்சை
பசுஸ்மதி அரசி வறுத்த அரிசிமா
மைசூர்பருப்பு
மொத்தமாகவும் சில்லறையாகவும்
கிடைக்கும். மற்றும் மளிகைப்
பொருட்களுக்கும் நாடுங்கள்



Jokob str 55 , 59494 Soest
Tel& Fax:02921-33403

அனைவருக்கும் எங்கள் இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்




ஓவியம்: மீண்டும் கண்ணா- 2012

"இன்னும் என்ன இருக்கிறது இந்த வாழ்க்கையில்?"
"இனியும் நான் வாழ்வதில் அர்த்தம் இருக்கிறதா?"

எப்போதாவது ஒரு தருணத்தில் எல்லோரிடத்திலும் எழக்கூடிய கேள்விகள் இவை.
இந்த வாழ்க்கை எதற்காக என்ற கேள்வி வாழ்க்கையின் ஆரம்பப்படிகளில் நின்று கொண்டிருப்பவர்களிடத்து அதிகமாக எழுவதில்லை என்பது உண்மைதான்.

இன்னும் ஆற்றவேண்டிய பணிகள் ஏராளமாக இருக்கின்றன என்று கருதுபவர்களிடத்தேயும் இனி வருங்காலம் எங்களுடையது என்று எண்ணிக் கொண்டிருப்பவர்களிடத்தேயும் இந்தக் கேள்விகள் எழுவதில்லைத்தான்.
ஆயினும், நிச்சயமாக நிகழும் என்று எதிர்பார்த்த ஒரு காரியம் நடக்காமலே போகும்போது அல்லது உயிர்கலந்த உறவொன்று நிரந்தரமாக ஒருவரை விட்டுப் பிரியும்போது இந்தக் கேள்விகள் சட்டென அவுாகளிடத்தே வந்து ஒட்டிக்கொள்கின்றன.

இந்தக் கேள்விகளிலிருந்து மீண்டுவர பலநாட்கள் பலமாதங்கள் பல வருடங்கள்கூட ஆகிவிடலாம். ஆனால் அப்போதும் இந்தக் கேள்விகளுக்கான பதில்கள் அவர்களுக்குக் கிட்டிவிடுகின்றன என்று சொல்வதற்கில்லை. பலரது வாழ்வு இந்தக் கேள்விகளுக்குள்ளேயே அமிழ்ந்து அர்த்தமிழந்து போய் விடுகிறது.

இந்த உலகத்தின் மக்கள் தொகை இந்த 2011ம் ஆண்டில் 700 கோடியை எட்டிவிடும் என்று ஒரு புள்ளிவிபரம் தகவல் தருகிறது.

எத்தனை கோடி மனிதர்கள் வாழ்ந்த வாழ்கின்ற பூமி இது.
வாழ்க்கை என்பதன் அாத்தம் புரிந்துகொண்டுதான் எல்லோரும் வாழ்ந்தார்களா வாழ்கிறார்களா?

வாழ்க்கையின் அர்த்தம் புரிந்தவர்களும் புரியா தவர்களுமாய் பலரும் வாழ்ந்தார்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இநத உலகம் இருக்கும் வரை இன்னும் எண்ணற்ற மனிதர்கள் வந்துகொண்டும் போய்க்கொண்டும்தான் இருக்கப் போகிறார்கள்.

இனியும் தொடரப்போகும் இந்த மனித வாழ்க்கைக்கு ஒரு அர்த்தம் இல்லாதிருந்குமானால் இத்தனை ஆயிரக்கணக்கான வருடங்கள் மனிதர்கள் தொடர்ந்து வாழ்ந்துகொண்டிருக்க முடியுமா?

ஆனால் இந்த வாழ்க்கைக்கு இன்னும் ஒரு முழுமையான அர்த்தம் கற்பிக்கப்படவில்லை அல்லது கண்டுகொள்ளப்படவில்லை.

முடிவற்ற ஒரு நம்பிக்கையின் தொடர்ச்சியாகவே இந்த வாழ்க்கை நகர்கிறது.
வாழ்க்கையின் அர்த்தம் கண்டுபிடித்தவர்களாக அல்லாமல் வாழ்க்கையின் அர்த்தமாகவே வாழ்ந்து மறைந்துபோன மாமனிதர்கள் இந்த மண்ணில் ஏராளம்.
இன்னும் அவர்களைப்போல் பலர் வாழ்கிறார்கள் இனியும் வாழ்வார்கள்.

நமது வாழ்க்கைக்கான அர்த்தம் நமது தேடல்களில்தான் இருக்கிறது.
நீ எதுவாக விரும்புகிறாயோ அதுவாகவே ஆகிப்போகிறாய் என்று முன்னோர்கள் மொழிந்ததும் இதைத்தான்.

இந்தத் தேடல் என்பது எங்கிருந்து ஆரம்பிக்கிறது? உயிர்வாழ்வதற்கான தேடலில் தொடங்கி வாழ்வின் பருவங்களுக்கான ஆசைகளின் வழியே தொடர்ந்து பல்வேறு செயல்வடிவங்களாகப் பரந்து செல்லும் தேடல்கள்!




சின்னச் சின்ன ஆசைகள் என்று தொடர்ந்து மாபெரும் இலட்சியங்களாய் வடிவெடுத்து மனிதவாழ்வுக்கான அர்த்தத்தை வடிவமைத்துக் கொடுப்பதும் இந்தத் தேடல்கள் தாம்.
நாளை நமதே என்ற நம்பிக்கையே இன்றைய தேடலுக்கான அடித்தளமாக அமைந்திருக் கிறது.

நாளை நாம் இருப்போமா இல்லையா என்ற கேள்வியைப் புறந்தள்ளயிவிட்டு தனது தேடலுக்கான பயணத்தைத் தொடரும் மனிதன்
நாளைய சந்ததிக்கான தனது பங்களிப்பைத் தருகிறான் என்பதே உண்மை. தேடல்களுக்கான தேவைகளின்றி அதற்கான விருப்பின்றி தன்னைத் தானே சுருக்கிக் கொள்ளும் ஒருவன் தனது வாழ்க்கைக்கான அர்த்தத்தைத் தொலைத்து விடுகிறான்.வாழ்வுக்கான அர்த்தத்தைத் தொலைத்தவன் நாளடைவில் தன்னையே தொலைத்து விடுகிறான்.
(தேடல் தொடரும்)




அந்தநாள் ஞாபகம் வருகிறதா? சிரித்திரன்

## சனிமாற்றம்...

16ம் பக்கத் தொடர்ச்சி ...மீனம்.

15-11-2011 முதல் 10-10-2012 வரை எதிர்பாராத பொருள்வரவு உண்டாகும். குடும்பத்தில் குதூகலம் கூடும். பேச்சால் ஜீவனம் செய்பவர்கள் வளர்ச்சி காண்பார்கள். கடன் உபத்திரவம் குறையும். தந்தையால் ஓரளவு நலம் உண்டாகும். செய்து வரும் தொழிலில் முழு ஈடுபாடு இருந்தால் வளர்ச்சி காணமுடியும். 17-5-2012 முதல் பொருளாதாரப் பிரச்னை உண்டாகும். பிறரால் ஏமாற்றப்பட நேரலாம். செய்தொழில் எதுவானாலும் அதில் முழுக்கவனம் தேவை. விரும்பத்தகாத இடமாற்றமோ, நிலை மாற்றமோ உண்டாகும். தேவைகளைச் சமாளிக்கக் கடன்பட நேரலாம். உடல் நலனில் கவனம் செலுத்த வேண்டி வரும். பொறாமைக்காரர்களாலும் போட்டியாளர்களாலும் தொல்லைகள் பெருகும். யாரிடத்திலும் வெளிப் படையாகப் பழகலாகாது. யாருக்கும் ஜாமீன் கொடுக்கவே வண்டாம். உங்கள் கடமைகளை நீங்களே ஆற்றி வருவது அவசியமாகும்.
11-10-2012 முதல் 4-11-2012 வரை பெற்றோரால் அளவோடு அனுகூலம் உண்டாகும். புதியவர்கள் உதவி புரிய முன்வருவார்கள். 23-12-2012 முதல் பயணத்தால் சங்கடத்துக்கு ஆளாக நேரலாம் எச்சரிக்கை தேவை. சொத்துக்கள் சம்பந்தமான பிரச்னைகள் ஏற்படும். வண்டி வாகனங்களில் செல்லும்போது விழிப்புடன் இருப்பது நல்லது. ஆகாயம், காற்று சம்பந்தப்பட்ட இனங்களால் சங்கடங்கள் உண்டாகும். உடல்நலம் பாதிக்கும். தோல், பல், கண், வாய், குடல் சம்பந்தப்பட்ட உபாதைகள் ஏற்படும். உணவுப் பழக்கத்தில் கட்டுப்பாடு அவசியம் தேவை. எதிலும் வேகம் கூடாது. 5-11-2013 முதல் 1-11-2014 வரை பிரச்னைகள் சற்று குறையும். செய்து வரும் தொழிலில் சீரான வளர்ச்சியைக் காணலாம். பண நடமாட்டம் சற்று அதிகரிக்கும். ஆன்மிக ஈடுபாடு மன அமைதியைத் தரும். நிலம், மனை, வீடு, வாகனங்கள் சேரும். சொத்துக்களால் அளவோடு ஆதாயமும் கிடைத்து வரும். 19-6-2014 முதல் எதிர்பாராத பொருள்வரவு உண்டாகும். மக்கள் நலம் சீராகும். வெளியூர், வெளிநாட்டுத் தொடர்புகள் பயன்படும். தெய்வ தரிசனம், சாது தரிசனம் ஆகியவை கிடைக்கும். புத்திசாலித் தனத்தால் எதையும் சமாளிப்பீர்கள். தெய்வானுகூலம் உண்டாகும். மொத்தத்தில் இந்தச் சனிப் பெயர்ச்சிக் காலம் சோதனையானது.
இறைவழிபாட்டின் மூலமும் கிரக வழிபாட்டின் மூலமும் மட்டுமே அமைதி பெறமுடியும். ஜாதக பலம் உள்ளவர்கள் கவலைப்பட வேண்டாம். தர்ம நியாயப்படி நடப்பவர்களைச் சனி எப்போதும் தண்டிக்கமாட்டார் என்பதால் நேர்வழியில் ஈடுபடுங்கள். பெரியோர்களது அறிவுரைகளைக் கேட்டு அதன்படி செயல்படுங்கள். நல்லதே நடக்கும்.
முற்றும்.




யேர்மனியில் பிராங்பேட் நகரில்...
Jaffna Basar
Tel: 069 25 62 63 53
ஒரே இடத்தில்
தரம் மிக்க தங்க நகைகள்
பயணங்களை இனிமையாக்க குறைந்த விலையில்
விமான பயணச்சீட்டுக்கள்
மற்றும் இல்லத்திற்கு வேண்டிய
மளிகைப் பொருட்கள்
அனைத்திற்கும்
Jaffna Basar Jewellery
Kaiserstr.64
Laden Nr.22
60329 Frankfurt am Main
உரிமையாளர் நடராஜா சுதன்

யேர்மனியில் முல்கைம் நகரில்...
Jaffna Basar
இல்லத்திற்கு வேண்டிய மளிகைப் பொருட்கள்
கடல் உணவு வகைகள்
பசுமையான மரக்கறிகள்.
தொலைபேசி அட்டைகள்
சிம் காட்டுக்கள்
அனைத்திற்கும் நாடுங்கள்
Jaffna Basar
Kaiserstr.39
45468 Mülheim
Germany
Tel:02086 96 64 85
Tel:01787633084






## Theipongal- ein ganz besonderes Fest

Das Theipongal ist ein Fest, welches man mit dem Erntedankfest vergleichen kann. Es leitet auch das tamilische Neujahr ein und ist eines der bedeutendsten und wichtigsten Feiertage der Tamilen. Meistens wird es am 14. oder am 15. Januar gefeiert. Ziel dieses Feiertages ist es, dass man der Sonne für ihre tägliche Gabe, also für die Ernte dankt. An diesem Tag dankt man auch den Landwirten für ihre harte Arbeit. Dies geschieht auf einer ganz besonderen Weise, das Zubereiten des Pongals, ein süßes Reisgericht, bildet den Mittelpunkt dieses Feiertages. In Deutschland wird dies nur am Herd zubereitet, während man dieses in Sri Lanka vor dem Haus an einer Feuerstelle und in einem neuem Topf zubereitete. Dabei wartet man gespannt auf den Augenblick, wenn das Gericht aus dem Topf überkocht, denn dies bedeutet Glück für das ganze Haus, Gesundheit und Wohlstand. Häufig ruft man dabei auch: „ Pongalo, Pongal!“. Danach wird jedem das Pongal serviert. Die Wichtigkeit dieses Festes liegt darin, dass man der Sonne dankt, denn ohne sie wäre das Leben auf der Erde nicht möglich sein.

Shariga Sivanathan

## 30 Dezember verschwindet aus dem Kalender




Der 30 Dezember wird einfach auf dem Inselreich Samoa, welches im Pazifik zwischen Hawaii und Neuseeland liegt, gestrichen. Das Land auf der Welt, in dem die Sonne zuletzt untergeht, wird nun ab dem Jahre 2012 nicht nur als Erstes das neue Jahr begrüßen, sondern wird auch einer der Länder sein, in dem die Sonne als Erstes aufgeht. Das Land verzichtet auf den Tag, um in die neue Zeitzone eintreten zu könne. Es geht am Donnerstag um Mitternacht vom 29. direkt auf den 31. Dezember über. Sie springt damit auf die andere Seite der internationalen Datumsgrenze. Schon 1892 sprang Samoa in die andere Datumsgrenze, um die wirtschaftlichen Beziehung zu den USA zu verbessern und in der Hoffnung diesen wirtschaftlich zu nähern. Wirtschaftliche Gründe sind nun wieder die ausschlaggebend dafür, dass sie wieder in die andere Datumsgrenze springt, da sie nun die wirtschaftlichen Beziehungen mit Australien und den asiatischen Ländern wieder ausbauen möchten. Diese Änderung betreffen nur die Westinseln, die Ostinseln bleiben wie gewohnt in der alten Zeitzone, da sie unter der Herrschaft der USA stehen. Aus diesen Gründen wird der 30 Dezember auf Samoa vom Kalender verschwinden, damit auch die Arbeitszeiten und die Geburtstage an diesem Tag einfach gestrichen.

### மார்கழி நாட்காட்டியிலிருந்து 30 ம் திகதி விலக்கல்!

நீங்கள் இதை அறிந்திருக்கிறீர்களா? அது சமோவா (Samoa) என்ற தீவுதான், மார்கழி 30ஐ தனது நாட்டின் நாட்காட்டியில் இருந்து நீக்கியுள்ளது. இதற்குக்காரணம் அந்த நாடு அவுஸ்திரேலியா. மற்றும் ஆசிய நாடுகளுடன் தனது நட்புறவை பேணுவதற்காகவும், வர்த்தக உறவை மேம்படுத்துவதற்காகவும் எடுத்துக்கொண்ட முயற்சி என்கின்றது. 1892ல் அவர்கள் ஒருமுறை நேர வலையத்தை மாற்றியிருந்தார்கள். அப்போது அவர்கள் அமெரிக்காவுடன் ஏற்படுத்திய நட்புறவும், அவர்கள் அவர்களைப்போல் உயர்வார்கள் என்ற நம்பிக்கையுமே காரணமாய் அமைந்தன. இப்போ காலத்தின் மாற்றத்தால் அவர்கள் 30ம் தேதியை விலக்கி, இதன் முலம் அவர்கள் ஆசிய நாடுகளுடன் ஒரு நேரவலையத்துக்குள் வரமுடிகின்றது. ஏனைய நாடுகளுடன் ஒருங்கிணைகின்றது. தகவல் ஷரீகா சிவநாதன்

## Dhanush folgt der Einladung des indischen Ministerpräsidenten

Dhanush folgt der Einladung des indischen Ministerpräsidenten Zum Abendessen wurde der tamilische Schauspieler Dhanush vom indischen Minister präsi denten, Manmohan Singh, höchst persönlich eingeladen.

Dies fand am 28. Dezember in der 7 Race Course Road Wohnsitz in der Hauptstadt Neu Delhi statt, auch der japanische Minister präsident Yoshihiko Noda war anwesend. Viele Fans, die Dhanush unbedingt sehen woll ten, also einen Hauch von dem magischen Geschmack Kola veris einfangen wollten, schl ugen sich sogar durch die Kälte des Winters und warteten geduldig auf diesen. Viele von ihnen hofften innig, dass er mit einem neuen Rekord bald in die Hauptstadt zurückkehrt.

Trotz des engen Zeitplans und den vielen Reisen, die seine Zeit am meisten beanspruchen, erscheint er als Kollywood Mamma an vielen Orten. Nicht nur auf den Handy Werbungen und hier und da auf den Geburtstagen der beliebten Stars, sondern überall ist sein Lächeln nun anzutreffen.



Dhanush

Viele meinen sogar, dass er noch eine gute Zeit vor sich hat. Direkt nach der Nokia- Werbungsau fnahmein Kalkutta flog Dhanush weiter nach Delhi. Als man ihn über die Einladung des indischen Ministerpräsidenten ansprach, sagte er nur: „ Delhi, ich komme! Nun bin ich bald zurück in Delhi, nachdem ich die nationale Auszeichnung dort erhalten habe! Ich bin einfach gespannt, was auf mich zukommt, denn schließlich ist es dort nur 2 Grad Celsius! Ich glaube, dass ich einfach Spaß haben werde! “



In Soest fand ein deutsch-tamilisches Kulturfest statt. Auf einer Bühne verschmolzen verschiedene Programme, die verschiedene Kulturen und Traditionen widerspiegelten, miteinander. Dies zeigt uns, dass durch solche Programme auch die Sprachbarriere zwischen den Kulturen durchbrochen werden kann. Solche Programme bietet uns auch eine seltene Chance unsere Kultur vielen anderen ein wenig näher zu bringen.


SURESH ASIEN FRISCH MARKT



Dortmund நகரில் 30 வருட சேவை...
இலங்கை இந்திய நாட்டு உடன் மீன் வகைகள்
நேரடி இறக்குமதியாளர்கள்.
Ceylon,Japan,Korea,Thailand என அனைத்து ஆசியன் நாட்டு
உணவுப் பொருட்கள் நேரடி இறக்குமதியாளர்கள்.
Restaurant களிற்குத் தேவையான அனைத்து வகையான இறைச்சி வகைகள்,
கடல் உணவுப் பொருட்கள், அனைத்தும் மொத்த விற்பனையாளர்கள்.
தாய்லாந்து சீனா வியட்நாம் இலங்கை இந்திய மரக்கறிவகைகள்
5000 மேற்பட்ட ஆசியன் உணவுப் பொருட்கள் எம்மிடம் நிறைவாக உள்ளன.
உரிமையாளர்: Pararajasingam.Suresh

Brüder Weg 6-8
44135 Dortmund
Tel:0231 55 17 60



asien super market@google.com


அனைவருக்கும் எங்கள் இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்

# திரை உலகம்






## ஒரு நாள் ஒரு கோடி

சின்னத்திரையில் பெரிய
தொகை பெறும் நடிகர் சூர்யா.
விஜய் தொலைக்காட்சியில்
ஆரம்பித்துள்ள ஒரு கோடி நிகழ்சிக்கு

ஒரு நாளுக்கு சூர்யா பெறும் தொகை ஒரு கோடியாம். இந்த நிகழ்ச்சிக்கு முதல் வர இருந்தவர் விஜய் என்ன காரணமோ அது நழுவ, இப்போ சூர்யாவிடம் வந்துவிட்டது. இப்படி பிரபலமான ஒரு நிகழ்சியை மும்பையில் அமிதாப்பச்சன் முன்பு நடத்தினார். மாதத்தில் ஆறே நாட்கள் சூர்யா கலந்துகொண்டு ஆறுகோடியை ஊதியமாக ஊதித்தள்ள இருக்கின்றார். எத்தனை நாளுக்குத்தான் சண்டை காதல் என்று படத்தில் விறு விறுப்புக் காட்டுவது. இது மூளைக்கும் வேலை வேலைக்கும் வேலை அல்லவா! தம்பி அரசியல் வேண்டாம் அழகாக தொழிலைச் செய் என்று சொலல் சிவகுமார் போன்று தந்தை எல்லூருக்கும் அமைவதில்லையே!



## முற்றிலும் புதிய தோற்றத்தில் விஜய் நடிக்கும் படம்: துப்பாக்கி

துப்பாக்கி படத்துக்காக இதுவரை பார்த்திராத புதிய முகத்துடன் வருகிறாராம் நடிகர் விஜய். பொதுவாக தன்னை மாற்றுவதில் நம்பிக்கை கிடையாது என்று கூறி வருபவர் விஜய்.

“வசீகரா“ படத்திற்கு பிறகு நடித்த படங்களில் பாடல்களுக்கு தேவைப்படும் போது மட்டும் தனது தோற்றத்தை மாற்றி வந்தார். காவலன், வேட்டைக்காரன் படங்களில் பாடல் காட்சிகளில் விதவிதமாக விக் மட்டும் மாற்றியுள்ளார். மற்ற எல்லா படங்களிலும் அவரது தோற்றம் ஒரே மாதிரிதான். இந்நிலையில் முருகதாஸ் இயக்கத்தில் தற்போது நடித்து வரும் “துப்பாக்கி“ படத்திற்காக தனது தோற்றத்தை முழுமையாக மாற்றியுள்ளாராம் விஜய்.

இந்தப் படம் தன்னை எங்கோ கொண்டு போகும் என அவர் நம்புவதால், மிக அதிக கவனம் காட்டி வருகிறாராம் விஜய். படத்தை குறித்த நேரத்தில் முடித்துவிட அனைத்து வழிகளிலும் இயக்குநருக்கு ஒத்துழைத்து வருகிறாராம்.

மும்பையில் விறுவிறுப்பாக இந்தப் படத்தின் ஷூட்டிங் நடந்து வருகிறது. இந்தப் படம் முடிந்த கையோடு கவுதம் மேனன் படத்தில் நடிக்கப் போகிறார் விஜய்.




டெல்லி ரேஸ் கோர்ஸ் சாலையில் பிரதமர் இல்லத்தில் 28.12.2011 நடந்த சிறப்பு விருந்தில் பங்கேற்றார் நடிகர் தனுஷ்.இந்தியா வந்துள்ள ஜப்பான் பிரதமர் யோஷிஹிகோ நோடாவுக்கு இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் நேற்று சிறப்பு விருந்து அளித்தார்.இதுபோன்ற விருந்துகளில் நாட்டின் முக்கிய பிரபலங்கள் அழைக்கப்பட்டு கவுரவிக்கப்படுவது வழக்கம். அந்த வகையில் “கொலவெறி டி“ என்ற பாடல் மூலம் இந்தியா முழுவதும் பிரபலமடைந்த தனுசுக்கு, பிரதமர் இல்லத்தில் நடைபெறும் விருந்தில் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. தற்போது இந்த பாடல் ஜப்பான் முழுவதும் இரவு விடுதிகளிலும், டிஸ்கொதே கிளப்புகளிலும் பாடப்பட்டு வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. ரஜினிகாந்துக்கு ஜப்பானில் ஏற்கனவே நிறைய ரசிகர்கள் உண்டு. ரஜினியின் முத்து படம்தான் ஜப்பானில் முதன்முறையாக ஜப்பானிய மொழியிலேயே சப் டைட்டிலுடன் வெளியானது. இப்போது தனுஷின் பாடல் புகழ்பெற்றுள்ளது.ஜப்பானி பிரதமருக்கு அவரை அறிமுகப்படுத்தும் விதத்திலும் இந்த விருந்து அமைந்தது.தனுஷின் கொலவெறி பாடல் இந்தியாவின் பல்வேறு மொழிகளில் மொழிமாற்றம் செய்யப்பட்டு வெளியாகிய வண்ணம் உள்ளது. பாகிஸ்தானிலும் இந்த பாடல் **'Where is Democracy?'** என்ற பெயரில் வெளியாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

## நண்பன் படத்தில் “சுளீர்“ வசனங்கள்



ஏ.ஆர்.ரஹ்மானிடம் அவர் அப்பா நீ பெரிய கிரிக்கெட் வீரராக வர வேண்டும் என்று சொல்லி இருந்தாலும், சச்சினிடம் அவரது அப்பா நீ பெரிய இசையமைப்பாளராக வர வேண்டும் என்று சொல்லி இருந்தாலும் என்ன நடந்து இருக்கும் சொல்லு” என்பது போன்ற நிறைய “சுளீர்“ வசனங்கள் இருக்கிறது “நண்பன்“ படத்தில்



18 வருட சேவையில் தங்கமாய் ஜொலிக்கும் நம்பிக்கை ஸ்தாபனம்

**LITTLE INDIA**

*Textile & Jewellery*

பட்டுச் சேலைகள், யப்பான் துணிவகைகள், தரம்மிக்க நகைகளுக்கும் நாடுங்கள்

02131 273692



Little India வின் மற்றுமொரு சேவை

உலகெங்கும் இன்பமாய் சிறகடித்துப் பறக்க இதமான சேவை....

**EurAsian - Tours**

Neuss புகையிரத நிலையத்திற்கு அருகாமையில்

அனைத்து விமானச் சீட்டுக்களையும், குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள நாடுங்கள். India Visa பெறவும் உதவி செய்வோம். அத்துடன் தங்குமிட வசதி, Tour Bus ஒழுங்குகள் செய்து தரப்படும். முன் கூட்டியே எம்முடன் தொடர்பு கொண்டு ஆசனங்களைப் பதிவு செய்யலாம்.

Tel:02131 73 87 83 Fax: 02131 73 87 84

Rishi 0174 96 44 965

info@eurasian-tours.com
Rishi Ganeshamoorthy



Eurasian Tours
Adolf - flecken -Str.11
41460 Neuss





**ASIA BAZAR**

Ria MONEY TRANSFER
MoneyGram Transfert d'argent

உங்கள் உறவுகளுக்கு பணம் அனுப்ப வேண்டுமா! இதோ!!!
துரித பண மாற்றுச் சேவை!

ஆசிய, ஆபிரிக்க உணவுவகைகள் வியாழன்சனிக்கிழமை தோறும் இலங்கை, இந்திய உடன் மரக்கறிவகைகள் கடல் உணவுப் பொருட்கள். இன்னும் பல...

தீபம்

உரிமையாளர்: பா.கனேஷ்
An der Stadt Mauer 2-4
41061 Mönchengladbach
Tel:02161 208303 Fax:02161-309282

தீபம் தொலைக்காட்சி அட்டைகள் எம்மிடம் கிடைக்கும்



யேர்மனியில் டோட்மூட் நகரில் சுவையான உணவிற்கு

தரமும் சுவையும் தரும்...




Tel:0231- 7252859

**CEYLON IMBISS**
இலங்கை உணவகம்

இலங்கை,இந்திய, உணவுகள், தரம் குன்றாத சுவையுடன் கிடைக்கும்!

திங்கள் முதல் சனிவரை
காலை 11.30 முதல்
மாலை 22.00 மணிவரை
ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களில்
16.00 -22.00 மணி வரை

Annen Str.1
44137 Dortmund



**Jasmine Silk House**

Urlaub: Bis12.Jan.2012

ஜஸ்மின் சில்க் ஹவுஸ்

யேர்மனியில் எமது நிறுவனத்தின் நேரடி இறக்குமதியாளர்கள்!
தரத்திற்கும், மலிவிற்கும், அதே காரணம்!

Tel:02102 844744

Jasmin Silk House
Fester Str.50
40882 Ratingen
HP:0173 1937 325
T.Mohanadas

பட்டுச்சேலை,கூறைச்சேலை , வேட்டிகள், குருதா, சோலி பஞ்சாபிகள், மற்றும் சிறுவர்களுக்கான ஆடைகள் இறக்குமதிசெய்யப்பட்டு குவிந்துகிடக்கின்றன. என்றும் மலிவான விலையில்! சிறந்த தரத்தில்!! உயர் ரகத்தில்!!!
உங்கள் எண்ணம்போல் கிடைக்கும்.
ஒரு முறை விஜயம் செய்யுங்கள் தரத்தையும் மலிவையும் அறிவீர்கள். உண்மை விளங்கும்.



நாளும் இங்கு தீபாவளி!



யேர்மனியில் தரம்மிக்க ஓர் மொத்த வியாபார நிலையம்!

**StaR - Impex**

StaR-Impex

புதுவருடம் தைப்பொங்கல் பண்டிகைகளை முன்னிட்டு

**மாபெரும் மலிவு விற்பனை!**

10.11.2011 முதல் 15.01.2012 வரை



SALE

கடல் உணவு வகைகள் வாரம் உடனுக்குடன் இறக்குமதி செய்கின்றோம்!

Öffnungszeiten:
Mo-Fr: 10.30-19.30
Sa: 09.30-18.00

GUTSCHEIN 50€

StaR Impex Gutschein

எம்மிடம் 100 யூரோவிற்கு மேல் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு தடவை ஒரு முத்திரை பதிக்கப்படும். இவ்வாறு 10 முத்திரை நீங்கள் பெற்றபின் எம்மிடம் இருந்து 50 யூரோவிற்கான Gutschein ஒன்று வழங்கப்படும். (இச்சலுகை நேரடியாக உடன் பணம் செலுத்துபவர்களுக்கு மட்டுமே)

தரமான முத்திரை பதித்த தயாரிப்புக்களான Niru,Kings,NGR, Rabeena, Suriya,Vaani,Leela,TRS பொருட்கள் எம்மிடம் நியாயவிலையில் கிடைக்கும்!

எம்மிடம் ஆசிய ஆபிரிக்க உணவுப்பொருட்கள் பலசரக்குப் பொருட்கள், கடலுணவு வகைகள் பூஜைப்பொருட்கள் அனைத்தையும் மொத்தமாகவும் மலிவாகவும் பெற்றுக்கொள்ளலாம்!

Kipper str.Tor.3
44147 Dortmund
Germany

StaR Impex : Inh :K.Sivasubramaniam

யாழ்ப்பாணத்தில் ஓர் சிறந்த திருமண மண்டபம்
திருமுருகன் திருமண மண்டபம்
நீர்வேலி-யாழ்ப்பாணம்
உரிமையாளர்.
திரு.சிவசுப்பிரமணியம் (செட்டியார்)
Tel: 0094 77 66 60 211
யேர்மனியில் தொடர்புகளுக்கு:
0231/8602696 Mobil: 0172/2183703





Tel.: 0231/8602696
Mobil: 0172/2183703- Fax: 0231/8602698
E-Mail: star-impex@live.de - Web.Star-impex-net